# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2014 – 2015

## மானியக் கோரிக்கை எண்.44


## ப. மோகன்
ஊரகத் தொழில்  மற்றும் தொழிலாளர்
நலன் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2014

## உள்ளடக்கம்


| வ.எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | முகவுரை | 1 |
| 2. | தொழில் வணிக ஆணையரகம் | 23 |
| 3. | தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் **(SIDCO)** | 79 |
| 4. | தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் **(TANSI)** | 106 |
| 5. | தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் **(EDI)** | 112 |

## குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை
## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2014–2015

### 1. முகவுரை

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வளர்ந்த மற்றும் வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியின் உந்து சக்தியாக கருதப்படுகின்றன. குறைந்த மூலதனத்தில் அதிக நபர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்குவது இந்நிறுவனங்களின் தனிச் சிறப்பாகும். மேலும் பெருந்தொழில் நிறுவனங்களோடு ஒப்பிடும் போது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வேலைவாய்ப்பு விகிதம் மிகவும் அதிகமாக உள்ளது. பொருளாதார நடவடிக்கைகளை பரவலாக்குவதன் மூலம் இந்நிறுவனங்கள் நாட்டின் வளங்களை நியாயமான மற்றும் சமச்சீரான வகையில் பங்கீடு செய்யவும் உதவுகின்றன. இந்நிறுவனங்கள் மனித ஆற்றல் மற்றும் மூலதனத்தின் பயன்பாட்டை கடனுதவி மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் மேம்படுத்துவதன் வாயிலாக சுய உதவி மற்றும் தொழில் முனைவு பாரம்பரியத்தை ஊக்குவிக்கின்றன. உள்நாட்டுப் பொருட்களை சார்ந்திருப்பது என்பது நிலைத்திருப்பதற்கும், தன்னிறைவு பெறுவதற்கும் காரணியாக இருப்பதால் இந்நிறுவனங்கள் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை சமாளித்து நியாயமான வளர்ச்சி விகிதத்தை தக்க வைத்துக் கொள்கின்றன.

### 1.1 உலக பொருளாதாரத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் குறிப்பாக வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக உள்ளன. பொருளாதார கூட்டுறவு மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (OECD) தனது அறிக்கையில் இக்கூட்டமைப்பு பகுதியில் உள்ள நிறுவனங்களில் 95% குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களாக இருப்பதாக தெரிவித்துள்ளது. மேலும், இந்நிறுவனங்கள் தனியார் துறை வேலை வாய்ப்பில் ஏறத்தாழ 60% பங்களிப்பதோடு மட்டுமில்லாமல், புதிய கண்டுபிடிப்பு, மண்டல வளர்ச்சி மற்றும் சமூக ஒருங்கிணைப்பு ஆகியவற்றிலும் பெரும் பங்காற்றுகின்றன.

வளர்ந்து வரும் நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் முக்கிய

பங்காற்றுகின்றன. அதிக அளவிலான உற்பத்தி, மதிப்பு கூட்டுதல் மற்றும் இலாபம் ஈட்டுதல் ஆகிய காரணிகளால் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியில் நேரடி விளைவுகளை ஏற்படுத்துகின்றன. மேலும், இந்நிறுவனங்களின் புதுமையாக்கம் மற்றும் நாட்டின் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை சமாளிக்கும் தன்மை ஆகிய காரணங்களால் இவை உள்நாட்டு மொத்த உற்பத்தியில் மறைமுகமாகவும் பங்காற்றுகின்றன.

## 1.2 வளர்ந்து வரும் பொருளாதாரத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கு

பெரும்பாலான ஆசிய நாடுகளில் வேலையின்மை மற்றும் போதிய வேலையின்மை ஆகியவை பொருளாதாரத்தின ஆரோக்கியமின்மைக்கு முக்கிய காரணமாக உள்ளன. இது நாட்டின் மக்கள் தொகை மற்றும் இருக்கின்ற ஆதார வளங்களை பயன்படுத்துதல் ஆகியவற்றில் பொருத்தமற்ற விகிதாச்சார நிலையை உருவாக்குகிறது. பெரும்பாலான ஆசிய நாடுகளில் பெருமளவிலான தொழில்மயமாக்குதலுக்கு நிதி பற்றாக்குறை முட்டுக்கட்டையாக உள்ளது. இந்நிலையில்,



ஏற்கனவே இயங்கி வரும் சிறு மற்றும் குடிசைத் தொழில்களை விரிவாக்கம் செய்தல் மற்றும் நவீனப்படுத்துதல், பெருமளவில் உற்பத்தி செய்யும் புதிய தொழில் நிறுவனங்களை நிறுவுதல் மற்றும் வேலையாட்களின் பின்தங்கிய நிலையில் உள்ள வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றின் மூலமாக நாட்டில் நிலவி வரும் வேலை வாய்ப்பின்மை மற்றும் போதிய வேலையின்மை ஆகிய பிரச்சனைகளை பெருமளவில் சமாளிக்க முடியும். ஊரகப் பகுதிகளில் உள்ள அதிகப் படியான மனித ஆற்றலை உபயோகிப்பதில் பெரும் தொழில் நிறுவனங்கள் குறைந்த அளவே வெற்றி கண்டுள்ளன. எனவே, வேலைவாய்ப்பின்மையை கட்டுப்படுத்துவதில் உலகெங்கிலும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களே மிகச் சிறந்த கருவிகளாக விளங்குகின்றன.

## 1.3 இந்திய பொருளாதாரத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கு

இந்திய பொருளாதாரத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இன்றைய நிலையில், இவை நாட்டின்

மொத்த உற்பத்தியில் 45%மும் ஏற்றுமதியில் 40%மும் பங்கேற்கின்றன. மதிப்பு கூட்டப்பட்ட பொருள்களின் உற்பத்தியில் இப்பிரிவின் பங்கு சுமார் 40%-ஆக உள்ளது. மேலும், இந்நிறுவனங்கள் வேளாண்மைக்கு அடுத்தப்படியாக அதிக நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கி வருகின்றன. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்யப்படும் ஒவ்வொரு இலட்ச ரூபாயும் சுமார் 0.21 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் நிறுவனங்களின் IVவது அனைத்து இந்திய புள்ளி விவர கணக்குகள் தெரிவிக்கின்றன.

நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 40% பங்கேற்பதன் மூலம் உலகளாவிய சந்தையில் இந்திய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் போட்டியிடும் திறன் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆயத்த ஆடைகள், தோல் பொருட்கள், பதனிடப்பட்ட உணவுப் பொருட்கள், எந்திரவியல் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தி மதிப்பு மற்றும் இந்நிறுவனங்களின் பங்கு குறிப்பிடத்தக்க வகையில் உள்ளதோடு விளையாட்டு பொருட்கள்



முதலான சில பொருட்களின் ஏற்றுமதியில் இந் நிறுவனங்கள் 100% பங்கு வகிக்கின்றன.

சமீப காலங்களில் நாட்டின் மொத்த தொழில் துறையின் வளர்ச்சி விகிதத்தோடு ஒப்பிடும் போது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தொடர்ந்து அதிக வளர்ச்சி விகிதத்தை பதிவு செய்துள்ளன. இயங்கும் தன்மை மற்றும் விரைவான இயக்கம் காரணமாக பொருளாதார மந்த நிலை மற்றும் பின்னடைவின்போதும், இத்தொழில் பிரிவில் காணப்படும் புதுமை புனைதல் மற்றும் தகவமைப்புத் தன்மை மூலம் இப்பிரிவால் தாக்குப்பிடிக்க முடிந்துள்ளது.

## 1.4 தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்

தமிழ் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பெரும் பங்கு ஆற்றுகின்றன. தமிழ்நாட்டில் 31.3.2014 அன்றைய நிலவரப்படி 9.68 இலட்சம் பதிவு செய்யப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் உள்ளன. மொத்தம் ரூ.67,130 கோடி முதலீட்டினைக் கொண்ட

இந்நிறுவனங்கள் **63.18** இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கி வருகின்றன. தமிழ்நாட்டிலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பொறியியல் பொருட்கள், மின்பொருட்கள், மின்னணு பொருட்கள், இரசாயனம், பிளாஸ்டிக், இரும்பு, சிமெண்ட், காகிதம், தீப்பெட்டி, ஜவுளி, பின்னலாடை, ஆயத்த ஆடைகள் உள்ளிட்ட **6,000–த்திற்கும்** மேற்பட்ட வகையான பொருட்களை தயாரிக்கின்றன.

கடந்த பத்து ஆண்டுகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி, செய்யப்பட்ட முதலீடு மற்றும் ஏற்படுத்திய வேலைவாய்ப்பு ஆகிய விவரங்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளன:–

**தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அடைந்த வளர்ச்சியின் விவரங்கள்**

| ஆண்டு | நிறுவனங்களின் எண்ணிக்கை | முதலீட்டு அளவு (ரூபாய் கோடியில்) | உற்பத்தி அளவு (ரூ.கோடியில்) | வேலை வாய்ப்பு (எண்ணிக்கை) |
|---|---|---|---|---|
| 2004–05 | 16253 | 1105.81 | 4556.97 | 60280 |
| 2005–06 | 20399 | 1705.20 | 4414.87 | 67800 |
| 2006–07 | 19201 | 714.41 | 2067.87 | 110026 |
| 2007–08 | 27209 | 2547.14 | 8739.95 | 242855 |
| 2008–09 | 32049 | 3557.89 | 13354.86 | 294255 |
| 2009–10 | 41799 | 3214.22 | 10880.01 | 151743 |
| 2010–11 | 57902 | 5872.37 | 12500.86 | 405233 |
| 2011–12 | 70758 | 7429.59 | 15496.00 | 502381 |
| 2012–13 | 83348 | 8751.54 | 17503.08 | 583436 |
| 2013–14 | 116393 | 18939.87 | 16832.25 | 494990 |



தமிழ்நாட்டில் கடந்த **2000–ஆம்** ஆண்டில் **3,87,597** ஆக இருந்த பதிவு பெற்ற குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை சிறப்பான வளர்ச்சி பெற்று **31.03.2014** அன்று **9,67,636** ஆக உயர்ந்துள்ளது.

## 1.5 தொலைநோக்குத் திட்டம் 2023

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் **2023**, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் எதிர்நோக்கும் பெரும் பிரச்சனைகளை கீழ்க்கண்டவாறு பட்டியலிட்டுள்ளது.

- சுலபமான கடன் வசதி
- சாதகமான ஒழுங்குமுறை மற்றும் கொள்கைச் சூழல்
- தொழில்நுட்ப வசதி
- சந்தைப்படுத்தும் வசதி
- உள்கட்டமைப்பு வசதிகள்

மேற்காணும் பிரச்சனைகளைத் திறம்படத் தீர்வு செய்வதற்கான வழிவகையினையும் தொலைநோக்கு திட்ட ஆவணம் வழங்கியுள்ளது. அதாவது கொள்கைசார் நடவடிக்கைகள், திறன் மேம்பாடு மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் போன்றவற்றை ஒருங்கிணைப்பதன் மூலம் உரிய இலக்கினை அடையமுடியும். சிறிய, நடுத்தரத் தொழில்களை போட்டித்திறன் பெற்றதாக மாற்ற ஒருங்கிணைந்த குழும வளர்ச்சி திட்டங்கள் அமல்படுத்தப்படும்.

### 1.6 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட சிறப்பு சலுகைத் தொகுப்பு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 7.5.2013 அன்று சட்டப் பேரவை விதி எண் 110ன் கீழ் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான சிறப்புச் சலுகைத் தொகுப்பு ஒன்றை அறிவித்தார்கள். அத்தொகுப்பு கீழ்காணும் 10 அறிவிப்புக்களை உள்ளடக்கியதாகும்.

(i) தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் அமைக்கப்படும் குறு, சிறு



மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் அமைக்கப்படும் குறுந்தொழில் நிறுவனங்கள் மற்றும் அனைத்து வட்டாரங்களிலும் அமைக்கப்படும் வேளாண் சார் குறு, சிறு மற்றும் நடுத்தரத் உற்பத்தி தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு, அவற்றின் இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களின் மொத்த மதிப்பில் 15% என்ற அளவில் தற்போது வழங்கப்பட்டு வரும் மானியம் இனி 25%-ஆக அதிகரித்து வழங்கப்படும். வழங்கப்படும் மானியத்தின் உச்ச வரம்பு 30 இலட்சம் ரூபாய் என இருக்கும்.

(ii) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை மேலும் ஊக்குவிக்கும் வகையில், புதிய தொழிற்பேட்டைகளை அமைக்கும் பொருட்டு, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலமாக, அதாவது SIDCO மூலமாக சுமார் 2000 ஏக்கர் பரப்பிலான நில வங்கி படிப்படியாக உருவாக்கப்படும்.

(iii) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், பெரிய தொழில் நிறுவனங்களின் அருகில் அமையும் வாய்ப்பை பெற்று ஒருங்கிணைந்து பயன்பெறும் வகையில், பெரிய நிறுவனங்களுக்காக தமிழ்நாடு தொழில்

முன்னேற்ற நிறுவனம், அதாவது SIPCOT-ஆல் உருவாக்கப்பட்ட மற்றும் உருவாக்கப்படும் தொழிற் பேட்டைகளில் உள்ள மொத்த நிலப் பரப்பில் குறைந்தபட்சம் 20% நிலம் ஒரே தொகுப்பாக, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு உரிய நிலக் கிரய விலையில் வழங்கப்படும். இவ்வாறு பெறப்படும் நிலத்தை தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் மேம்படுத்தி குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யும். இது மட்டுமல்லாமல், சிறு தொழில் முனைவோர் விரைவாக தொழில் துவங்கும் வகையில் 5000 சதுர அடிக்கு மேற்பட்ட தொழிற் கூடங்களை ஒதுக்கீடு செய்ய அரசின் அனுமதி பெற வேண்டும் என்ற நிலையை மாற்றி, 50 சென்ட் வரையிலான தொழிற் கூடங்களை ஒதுக்கீடு செய்ய சிட்கோ நிறுவனத்திற்கு முழு அதிகாரம் வழங்கப்படும்.

(iv) நகர்ப்புற குடியிருப்பு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தொழிற் கூடங்கள் அப்பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பல்வேறு மாசுகளை ஏற்படுத்துகின்றன. நகர்ப்புறத்தில் உள்ள இட நெருக்கடி காரணமாக தொழிற் கூடங்களை



விரிவுப்படுத்தவும் இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே, சுற்றுச் சூழலை பாதுகாக்கும் வகையிலும், தொழிற் கூடங்களை விரிவுபடுத்தும் நோக்கிலும், ஏற்னெவே, நகர்ப் பகுதிகளில் ஆங்காங்கே அமைந்துள்ள தொழிற் கூடங்களை மாற்றி அமைத்து நகருக்கு வெளியே தொழிற் குழுமம் மற்றும் தொழிற் பேட்டைகளை உருவாக்க தனியார் தொழில்முனைவோர் அமைப்புகள் முன்வரும் பட்சத்தில், மின் இணைப்பு வழங்குதல், நீர் வழங்குதல், காட்சி / கருத்தரங்க கூடங்கள், விற்பனை வசதி மையங்கள் முதலிய அடிப்படை கட்டமைப்புகள் மற்றும் பொது வசதிகளை ஏற்படுத்த அரசு மானியம் 75% என்ற அளவில் அதிகபட்சமாக 15 கோடி ரூபாய் வரை வழங்கப்படும். இதே போல், தனியார் தொழில்முனைவோர் அமைப்புகள் புதிய தொழில் நிறுவனங்களுக்கென புதிய தொழிற் குழுமம் மற்றும் தொழிற்பேட்டை அமைக்க முன்வரும் பட்சத்தில் அரசு மானியம் 50% என்ற அளவில் அதிக பட்சமாக 10 கோடி ரூபாய் வரை வழங்கப்படும்.

(v) தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் நடைமுறையில் உள்ள நில விலை நிர்ணய முறை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு உகந்த வகையில் சீரானதாகவும்

நிலையானதாகவும் இல்லை என்பதைக் கருத்தில் கொண்டு, தற்போதுள்ள முழு விலை விற்பனை மற்றும் தவணை முறை விற்பனை ஆகியவற்றை மாற்றி அமைத்து தொழில் வளர்ச்சிக்கு உகந்த இலாப நோக்கமற்ற விலை நிர்ணயக் கொள்கை உருவாக்கப்படும். அரசு மற்றும் சிட்கோ தொழிற் பேட்டைகளில் தொழில் மனைகள் மற்றும் தொழிற் கூடங்களை 30 ஆண்டு கால குத்தகை அடிப்படையில் வழங்கிடவும், 30 ஆண்டு கால முடிவில் தொழில்முனைவோருக்கு முழு கிரய விலையில் வாங்கவும் வாய்ப்பளிக்கப்படும்.

(vi) புதிய தொழிற்பேட்டைகளை அமைப்பதில் தகுதியான (தனியார் மற்றும் அரசு) நிலங்களை தேர்வு செய்து பெறுவதிலிருந்து நில வரைபடம் ஒப்புதல் பெற்று ஒதுக்கீடு செய்யும் வரை உள்ள பல்வேறு நிலைகளில், பல்வேறு அரசு துறைகள் மற்றும் நிறுவனங்களிடம் இருந்து தடையின்மைச் சான்று மற்றும் ஒப்புதல்களை பெற வேண்டியுள்ளதால் ஏற்படும் கால தாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு, தலைமைச் செயலாளர் தலைமையில் மாநில அளவிலான ஒற்றைச் சாளர தீர்வுக் குழு, அதாவது Single Window Clearance Committee ஒன்று ஏற்படுத்தப்படும்.



(vii) தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை முக்கிய நோக்கமாக கொண்டு பல்வேறு இடங்களில் தொழிற்பேட்டைகளை உருவாக்குதல், மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள தனது சொந்த நிதி மட்டுமல்லாமல் மாநில மற்றும் மத்திய அரசு வழங்கும் மானியத்தை பயன்படுத்தி வருகிறது. சிட்கோ நிறுவனத்தின் நிதி ஆதாரத்தை மேலும் பலப்படுத்தி சிறு தொழில்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், சிட்கோ நிறுவனத்திற்கு கூடுதலாக 16 கோடி ரூபாய் அரசின் பங்கு மூலதனமாக வழங்கப்படும்.

(viii) சென்னைப் பெருநகரை ஒட்டியுள்ள பகுதிகளில், நிலத்தின் விலை அதிகமாக உயர்ந்து வருவதாலும், தொழிற்பேட்டைகள் துவங்க போதுமான காலி இடங்கள் இல்லாததாலும், தற்போதுள்ள தொழிற் பேட்டைகளை விரிவுபடுத்த போதிய இடம் இல்லாததாலும், சிறு தொழில்முனைவோர், தொழிற் கூடங்களை அமைக்க உதவும் வகையில், அடுக்கு மாடி தொழில் வளாகங்களை, அதாவது Multi-storeyed Industrial Complexes அமைத்துத் தரப்படும். முதற் கட்டமாக, திருவள்ளூர் மாவட்டம், திருமழிசையில்

சிறு தொழில் முனைவோருக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் குறுந்தொழில் கூடங்களை ஒதுக்கும் பொருட்டு 20 கோடி ரூபாய் செலவில் அடுக்குமாடி தொழில் வளாகம் ஒன்று சிட்கோ நிறுவனத்தின் மூலம் உருவாக்கப்படும்.

(ix) தமிழ்நாடு அரசின் தொலை நோக்குப் பார்வை 2023–ல் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கினை எய்தும் வகையிலும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர்களை உருவாக்கும் வகையிலும், தொழில்நுட்பம் சார்ந்த தொழில் முனைவு மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி ஆகிய பயிற்சிகள் பல்வேறு தொழில் குழுமங்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு, தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், அதாவது Entrepreneurship Development Institute மூலம் வழங்கப்படும். மேலும், சுயதொழில் நடத்தி வரும் மகளிர் எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு, மகளிர்க்கென சிறப்பு பயிற்சிகள் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்படும். இந்தப் பயிற்சித் திட்டங்களை செயல்படுத்த நடப்பாண்டில் தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு 5 கோடி ரூபாய் அரசு மானியமாக வழங்கப்படும்.



(x) கூட்டு முயற்சியினை ஊக்குவிக்கும் வகையில், தனியார் தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவன அமைப்புகள் தொழிற்பேட்டைகளை ஆரம்பிக்க முன்வந்தால், சிட்கோ நிறுவனம் அவற்றுடன் இணைந்து 10% வரை மூலதனத்தைச் செலுத்தி புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்கும்.

மேற்சொல்லப்பட்ட அனைத்து அறிவிப்புகள் மீதும் உரிய ஆணைகள் அரசால் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வறிவிப்புகள் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தொழில் முனைவோர் மற்றும் சிறுதொழில் சங்கங்களிடமிருந்து மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ளன.

## 1.7 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

இத்துறையின் கட்டுப்பாட்டில் கீழ்க்கண்ட ஆறு முக்கிய நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன

அ) தொழில் வணிக ஆணையரகம் (IC&DIC)

ஆ) தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (SIDCO)

இ) தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (TANSI)

ஈ) தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் (EDI)

உ) தமிழ்நாடு சிறுதேயிலை விவசாயிகளின் தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் இணையம் (Indcoserve)

ஊ) சேலம் ஸ்டார்ச் மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவை தொழில் கூட்டுறவு சங்கம் (Sagoserve)

தொழில் வணிக ஆணையரகமானது, தொழில் முனைவோர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் துணைவரும் ஆதரவினை மாவட்ட தொழில் மையங்கள் வாயிலாக செய்து வருகிறது. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு தொழில் மனைகள் / தொழிற்கூடங்கள் ஒதுக்குவதோடு பிற கட்டமைப்பு வசதிகளையும் செய்து தருகிறது. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனமானது மரம் மற்றும் எஃகிலான அறைகலன்கள், கைப் பம்புகள், மின் கடத்தி பொருட்கள் போன்றவைகளை தயாரிக்கும் பணிகளை செய்து வருகிறது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான பயிற்சித் தேவைகளை பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு தொழில்



முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தை அரசு நிறுவியது. உறுப்பினர் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யும் தேயிலைத் தூளை சந்தைப்படுத்தி அதன் மூலம் நல்ல விலையை பெற்றுத் தரும் நோக்கத்தோடு தமிழ்நாடு சிறுதேயிலை விவசாயிகளின் தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் இணையம் (Indcoserve) 1965ல் குன்னூரில் உருவாக்கப்பட்டது. சேகோசர்வ் என்று அழைக்கப்படும் சேலம் ஸ்டார்ச் மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவை தொழில் கூட்டுறவு சங்கம் (Sagoserve) உறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை சந்தைப் படுத்துவதோடு கிடங்கு வசதி மற்றும் கடன் வசதிகளையும் செய்து தருகிறது.

### 1.8 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டு சட்டம், 2006

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு, மைய அரசு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டு சட்டம் எனும் சட்டத்தை 2006–ல் இயற்றி உள்ளது. இச்சட்டம், முதன் முதலாக ஒருங்கிணைந்த உற்பத்தி மற்றும் சேவைத்

தொழில்களுக்கு சட்ட ரீதியாக "நிறுவனங்கள்" என்ற அங்கீகாரத்தினை அளித்துள்ளது. இச்சட்டத்தின் மூலம் முதல் முறையாக "நடுத்தர நிறுவனங்கள்" வரையறுக்கப்பட்டதோடு, இச்சட்டம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ஆகிய மூன்று பிரிவுகளையும் ஒருங்கிணைத்துள்ளது. தேசிய அளவில் இச்சட்டம் எல்லாப் பிரிவு பணயதாரர்களுக்கும் (Stake Holders) சட்டப்பூர்வமான ஆலோசனை வழங்கும் அமைப்பாக உருவாக்கப்பட்டதோடு, மூன்று வகையான நிறுவனங்களுக்கும் பல்வேறு வகையான ஆலோசனைகளை வழங்கும் சேவையை செய்து வருகிறது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன மேம்பாட்டுச் சட்டம் 2006–இன்படி உற்பத்தி மற்றும் சேவை நிறுவனங்கள், ஆகியவற்றின் இயந்திரம், தளவாடம் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் முதலீட்டு மதிப்பின் (நிலம் மற்றும் கட்டடங்கள் நீங்கலாக) அடிப்படையில் கீழ்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.



**உற்பத்தி நிறுவனங்கள்**

| | | |
|---|---|---|
| குறு உற்பத்தி நிறுவனங்கள் | : | ரூ.25 இலட்சம் வரை |
| சிறு உற்பத்தி நிறுவனங்கள் | : | ரூ.25 இலட்சத்திற்கு மேல் ரூ.5 கோடி வரை |
| நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள் | : | ரூ.5 கோடிக்கு மேல் ரூ.10 கோடி வரை |

**சேவை நிறுவனங்கள்**

| | | |
|---|---|---|
| குறு சேவை நிறுவனங்கள் | : | ரூ.10 இலட்சம் வரை |
| சிறு சேவை நிறுவனங்கள் | : | ரூ.10 இலட்சத்திற்கு மேல் ரூ.2 கோடி வரை |
| நடுத்தர சேவை நிறுவனங்கள் | : | ரூ.2 கோடிக்கு மேல் ரூ.5 கோடி வரை |

### 1.9 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களால் ஏற்படுத்தப்படும் வேலைவாய்ப்பு

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் ஆண்டு வளர்ச்சி விகிதத்தை 10%-ஆக நிலைநிறுத்துவதற்கும் XI–வது ஐந்தாண்டு திட்டக்காலத்தில், சுமார் 10 இலட்சம் பேருக்கு நேர்முக மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்குடனும் தமிழ்நாடு அரசு குறு, சிறு மற்றும்

நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கென தனியானதொரு கொள்கையை அறிவித்தது.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான மானியம் வழங்குதல், உள்கட்டமைப்பு வசதியை மேம்படுத்துதல், தொழில் நுட்ப மேம்பாடு, திறன் மேம்பாடு, சந்தை வாய்ப்பு உதவி, கட்டுபாடுகளைத் தளர்த்தி எளிமைப்படுத்தல், நிர்வாகச்சீர்திருத்தம், நலிவடைந்த தொழில் நிறுவனங்களைப் புணரமைத்தல் ஆகியவற்றை மையமாக கொண்டு இக்கொள்கை உருவாக்கப்பட்டது.

XI–ஆவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் 10 இலட்சம் வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும் எனும் திட்ட இலக்கில் மாநிலத்தில் 10.57 இலட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.

XII-ஆம் ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2012–17) சுமார் 15 இலட்சம் பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. XII-ஆம் ஐந்தாண்டு திட்டத்தின் முதல் 2 ஆண்டுகளில் (2012–13 மற்றும் 2013–14) மாநிலத்தில் 6.82 இலட்சம்



நபர்களுக்கு கீழ்க்கண்டவாறு வேலை வாய்ப்பு உருவாக்கபட்டுள்ளது.

| வருடம் | வேலை வாய்ப்பு உருவாக்கம் |
|---|---|
| 2012–13 | 3,38,435 |
| 2013–14 | 3,43,665 |
| மொத்தம் | 6,82,100 |

## 2. தொழில் வணிக ஆணையரகம்

தொழில் வளர்ச்சிக்கு, குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு தொழில் வணிக ஆணையரகம் மாநில அளவிலான முகமையாக விளங்குகிறது. இவ்வாணையரகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் அனைத்து (32) மாவட்டங்களிலும் மாவட்ட தொழில் மையங்கள் இயங்கி வருகின்றன. சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரை மண்டல இணை இயக்குனர், மாவட்ட தொழில் மையத்தின் தலைவராக உள்ளார். மாவட்ட தொழில் மையங்கள் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் தொழில் நிறுவனங்களை ஆரம்பித்து நடத்துதல், நிலைத்திருக்கத்தக்க தொழில் நடவடிக்கைகளை கண்டறிதல், திட்ட அறிக்கை தயாரித்தல், பல்வேறு வங்கிகள்/நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெறுதல், அரசுத் துறைகளிடமிருந்து சட்ட பூர்வ அனுமதிகளை பெறுதல், தகுதியான மானியங்களை பெற்றுத் தருதல் மற்றும் நிலுவையிலுள்ள தொகைகளை பெற உதவுதல் போன்ற பலதரப்பட்ட வழிகாட்டுதல்களை அளிக்கின்றன.



### 2.1 தொழில் முனைவோர் பதிவறிக்கை பதிவு செய்தல்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் 2006ன்படி குறு, சிறு உற்பத்தி / சேவை நிறுவனங்கள், நடுத்தர சேவை நிறுவனங்களுக்கு தொழில் முனைவோர் பதிவறிக்கை பதிவு செய்தல் விருப்பத்தின் அடிப்படையிலும், நடுத்தர உற்பத்தி நிறுவனங்களுக்கு கட்டாயமாகவும் செய்யப்படுகிறது.

குறு மற்றும் சிறு தொழில் தொடங்க விருப்பம் உள்ளவர் எவரும் தாமாக முன் வந்து, அதற்குரிய படிவத்திலான தொழில் முனைவோர் பதிவறிக்கையினை, அந்தந்த மாவட்டத் தொழில் மையத்தின் பொது மேலாளரிடமும், சென்னையைப் பொறுத்தவரை தொழில் வணிகத் துறையின் மண்டல இணை இயக்குநர் அலுவலகத்திலும் பதிவு செய்யலாம்.

இத்துறையின் மூலம் எளிதான முறையில் இணையதளத்தின் வாயிலாக தொழில் முனைவோர் பதிவறிக்கை – பகுதி I மற்றும் பகுதி II-ஐ பதிவு செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் தொழில் முனைவோர் மாவட்ட தொழில் மையத்திற்கு செல்லாமலேயே www.msmeonline.tn.gov.in என்ற

இணையதளத்தின் மூலம் தொழில் முனைவோர் பதிவறிக்கையினை பதிவு செய்து அதற்கான ஒப்புகையினை உடனடியாக பெற்றுக் கொள்ளலாம். ஆகஸ்ட் 2013 முதல் தொழில் முனைவோர் பதிவறிக்கை பகுதி I மற்றும் II 100 % இணையதளம் வாயிலாக வெளியிடப்படுகிறது.

இணையதளத்தின் மூலம் பதிவு செய்யும் இத்திட்டம் தொழில்முனைவோரிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. 31.3.2014 வரை தொழில் முனைவோர் பதிவறிக்கை, பகுதி I–இல் 4,08,605 நிறுவனங்களுக்கும், பகுதி II–இல் 3,22,182 நிறுவனங்களுக்கும் இணையதளம் வாயிலாக பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

**தொழில் முனைவோர் பதிவறிக்கை பதிவு செய்தலில் அதிகரித்துவரும் போக்கு**

**தொழில் முனைவோர் பதிவறிக்கை பகுதி – I**

| வருடம் | அலுவலகம் மூலமாக | இணைய தளம் மூலமாக | மொத்தம் | இணைய தளம் மூலம் பதிவு செய்யப் பட்ட தொழில் முனைவோர் ஒப்புதல் திவறிக்கை சதவீதம் |
|---|---|---|---|---|
| 2007–08 | 35072 | – | 35072 | 0.0 |
| 2008–09 | 22037 | 21395 | 43432 | 49.3 |
| 2009–10 | 11711 | 55177 | 66888 | 82.5 |
| 2010–11 | 12059 | 65760 | 77819 | 84.5 |
| 2011–12 | 9999 | 73935 | 83934 | 88.1 |
| 2012–13 | 9997 | 84819 | 94816 | 89.5 |
| 2013–14 | 1442 | 107519 | 108961 | 98.68 |
| மொத்தம் | 102317 | 408605 | 510922 | |



**தொழில் முனைவோர் பதிவறிக்கை பகுதி – II**

| வருடம் | அலுவலகம் மூலமாக | இணைய தளம் மூலமாக | மொத்தம் | இணைய தளம் மூலம் பதிவு செய்யப்பட்ட தொழில் முனைவோர் பதிவு அறிக்கை சதவீதம் |
|---|---|---|---|---|
| 2007–08 | 27209 | – | 27209 | 0.0 |
| 2008–09 | 22642 | 9407 | 32049 | 29.4 |
| 2009–10 | 10673 | 31126 | 41799 | 74.5 |
| 2010–11 | 16514 | 41388 | 57902 | 71.5 |
| 2011–12 | 18867 | 51891 | 70758 | 73.3 |
| 2012–13 | 16457 | 74517 | 90974 | 81.91 |
| 2013–14 | 2540 | 113853 | 116393 | 97.82 |
| மொத்தம் | 114902 | 322182 | 437084 | |

## 2.2 சலுகைத் திட்டங்கள்

மாநிலத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு கீழ்க்காணும் சலுகைத் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன :-

### 2.2.1 மாநிலத்தில் நிறுவப்படும் குறு உற்பத்தி நிறுவனங்களுக்கான மானிய உதவிகள்

- ❖ குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட அடிப்படையில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஒரு உத்வேகத்தை ஏற்படுத்தவும் அந்நிறுவனங்களில் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவும் நோக்குடனும் இந்நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வந்த முதலீட்டு மானிய அளவான 15%-ஐ 25%ஆக 7.5.2013 முதல் அரசு அதிகரித்து வழங்கிவருகிறது.
- ❖ வணிக ரீதியில் உற்பத்தி தொடங்கிய நாள் அல்லது மின் இணைப்பு பெற்ற நாள் இவற்றில் எது பிந்தையதோ அந்நாளிலிருந்து முதல் 36 மாதங்களுக்கு 20% குறைந்த அழுத்த மின் மானியம் வழங்கப்படுகிறது.
- ❖ குறு உற்பத்தி நிறுவனங்களுக்கு, அவற்றின் இயந்திர தளவாடங்களின் மீது செய்யப்பட்ட முதலீடு வரையான தொகை, அவை உற்பத்தி தொடங்கிய முதல் 6 ஆண்டுகளில் செலுத்தப்படும் மதிப்பு கூட்டு வரி ஒவ்வொரு காலாண்டிலும் அவர்களுக்கு 100% திருப்பி வழங்கப்படும்.
- ❖ அடமானம் வைக்கப்பட்ட மற்றும் பிணையமாக வைக்கப்பட்ட ஆவணங்களை பதிவு செய்வதற்கான முத்திரைக் கட்டணம்



செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

### 2.2.2 தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய வட்டாரங்கள் மற்றும் வேளாண்சார் தொழில் நிறுவனங்களுக்கான மானியத் திட்டங்கள்

தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய 251 வட்டாரங்கள், அரசு மற்றும் அரசு முகமைகளான சிப்காட், சிட்கோ ஆகியவை உருவாக்கும் அனைத்துத் தொழிற்பேட்டைகளில் (சென்னை நகரின் மையப்பகுதியில் இருந்து 50 கிலோமீட்டர் சுற்றளவிற்குள் அமைந்துள்ள தொழிற்பேட்டைகள் தவிர்த்து) அமைக்கப்படும் அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்களும் மற்றும் மாநிலத்தின் 385 வட்டாரங்களில் அமைக்கப்படும் வேளாண்சார் நிறுவனங்களும் கீழ்க்கண்ட சலுகைத் திட்டங்கள் பெற தகுதியுடையனவாகும்.

- ❖ இயந்திர தளவாடங்களின் மதிப்பில் 25%, அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் முதலீட்டு மானியம்.
- ❖ உற்பத்தி தொடங்கிய நாளிலிருந்து முதல் 5 ஆண்டுகளில் 3 ஆண்டுகளுக்குள், 25 வேலை ஆட்களைப் பணியில் ஈடுபடுத்தும்

❖ நிறுவனங்களுக்கு அவற்றின் தகுதியான இயந்திர தளவாடங்களின் மீதான முதலீட்டின் மதிப்பில் 5% அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் வேலைவாய்ப்பு பெருக்க மானியம்.

❖ மகளிர், பட்டியலிடப்பட்ட இனம்/ பழங்குடியினர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகள் ஆகிய தொழில் முனைவோர்களால் அமைக்கப்படும் நிறுவனங்களின் தகுதியான இயந்திர தளவாடங்களின் முதலீட்டின் மதிப்பில் 5%, அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் கூடுதல் முதலீட்டு மானியம்.

❖ மாசற்ற மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய சான்றின்பேரில், அந்நிறுவனங்களுக்கு தகுதியான இயந்திர தளவாடங்கள் மீதான முதலீட்டின் மதிப்பில் 25%, அதிகபட்சமாக ரூ.3 இலட்சம் கூடுதல் முதலீட்டு மானியம்.

❖ வணிக ரீதியில் உற்பத்தி தொடங்கிய நாள் அல்லது மின் இணைப்பு பெற்ற நாள் இவற்றில் எது பிந்தையதோ அந்நாளிலிருந்து முதல் 36 மாதங்களுக்கு 20 % குறைந்த அழுத்த மின் மானியம்.



### 2.2.3 சிறப்பு வகை உற்பத்தி நிறுவனங்களுக்கான சிறப்பு மூலதன மானியம்

தமிழ்நாட்டில் எந்தப் பகுதியிலும் அமைக்கப்படும் 13 சிறப்பு வகை உற்பத்தி தொழில் பிரிவுகளான மின் மற்றும் மின்னணு பொருட்கள், தோல் மற்றும் தோல்பொருட்கள், வாகன உதிரி பாகங்கள், மருந்து மற்றும் மருத்துவ பொருட்கள், சூரிய சக்தி பயன்பாட்டு உபகரணங்கள், ஏற்றுமதிக்கான தங்கம் மற்றும் வைர நகைகள், மாசுக் கட்டுப்பாட்டு சாதனங்கள், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உதிரிபாகங்கள், சிக்கன கட்டுமானப் பொருட்கள், ஆயத்த ஆடைகள், உணவு பதப்படுத்துதல், பிளாஸ்டிக் மற்றும் ரப்பர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்களுக்கு, தகுதியான இயந்திர தளவாடங்கள் மீதான முதலீட்டின் மதிப்பில் 25%, அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் சிறப்பு மூலதன முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

### 2.2.4 மின்னாக்கி மானியம்

மாநிலத்தில் எப்பகுதியிலும் அமைந்துள்ள குறு சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள் வாங்கும் 320

KVA வரை திறன் கொண்ட மின்னாக்கியின் மதிப்பில் 25%, அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் வரை மின்னாக்கி மானியமாக வழங்கப்படுகிறது.

### 2.2.5 பின்முனை வட்டி மானியம்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் உற்பத்தி நிறுவனங்கள் தொழில் நுட்ப மேம்பாடு மற்றும் நவீனப் படுத்துதல், கடன் உத்தரவாத நிதி ஆதாரத் திட்டம் ஆகியவற்றிற்காக வாங்கும் ரூ.1 கோடி வரையிலான கடன்களின் மீது 5 ஆண்டுகளுக்கு அதிகபட்சமாக ரூ. 10 இலட்சத்திற்கு 3% என்ற அளவில் பின்முனை வட்டி மானியமாக வழங்கப்படுகிறது.

### 2.2.6 மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம்

குறு உற்பத்தி நிறுவனங்களுக்கு, அவற்றின் இயந்திர தளவாடங்களின் மதிப்புக்கு ஈடான தொகை, அவை உற்பத்தி தொடங்கிய முதல் ஆறு ஆண்டுகளில் செலுத்தப்படும் மதிப்பு கூட்டு வரி ஒவ்வொரு காலாண்டிலும் அவர்களுக்கு 100% திருப்பி வழங்கப்படும்.



### 2.2.7 குறைந்த அழுத்த மின் மானியம்

கீழ்க்கண்ட வகையான குறு, சிறு மற்றும் நடுத்தரத் உற்பத்தி நிறுவனங்கள் அவை வணிக ரீதியில் உற்பத்தி தொடங்கிய நாள் அல்லது மின் இணைப்பு பெற்ற நாள் இவற்றில் எது பிந்தையதோ அந்நாளிலிருந்து முதல் 36 மாதங்களுக்கு 20% குறைந்த அழுத்த மின் மானியம் பெற தகுதியானவை.

- ❖ மாநிலத்தின் எப்பகுதியிலும் அமைக்கப்படும் குறு உற்பத்தி நிறுவனங்கள்
- ❖ மாநிலத்தின் அனைத்து 385 வட்டாரங்களிலும் அமைக்கப்படும் வேளாண்சார் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில் நிறுவனங்கள்.
- ❖ தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்ட வட்டாரங்களில் மற்றும் அரசு தொழிற் பேட்டைகளில் அமைக்கப்படும் குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள் (சென்னை நகரின் மையப் பகுதியிலிருந்து 50 கி.மீ. சுற்றளவுக்குள் அமைந்துள்ள தொழிற் பேட்டைகளைத் தவிர)
- ❖ இச்சலுகை ஏற்கனவே இயங்கி வரும் நிறுவனங்களில் குறிப்பிடத்தக்க அளவில் செய்யப்படும் உற்பத்தி அதிகரிப்பு மற்றும் உற்பத்தி வகை மாற்றம் செய்யும் நிறுவனங்களுக்கும் வழங்கப்படும்.

## 2.3 தொழில் நுட்ப மேம்பாட்டுக்கான திட்டங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக கீழ்க்கண்ட திட்டங்கள் வாயிலாக அரசு நிதியுதவி வழங்குகிறது:-

- ❖ உரிமைக்காப்பு (கண்டறிதல் உரிமை) பதிவு விண்ணப்பத்திற்கான தொகையில் ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் 50%, அதிக பட்சமாக ரூ.2 இலட்சம்.
- ❖ வர்த்தக குறியீடு பதிவு தொகையில் 50% அல்லது ரூ.25,000/– இதில் எது குறைவோனதோ அத்தொகை.
- ❖ தூய்மையான/சக்தி திறனுள்ள/தகவல் தொழில் நுட்பம் தொடர்புடைய தொழில் நுட்பங்களை உருவாக்குதல்.
- ❖ திறன்மிகு மையங்கள் மற்றும் தொழில் நுட்ப வணிக சேவை வளர்ப்பகங்களை உருவாக்கி அதன் மூலம் நவீன உற்பத்தி உத்திகள் மற்றும் வடிவமைப்பு மேம்பாடு செய்ய ஒவ்வொரு தொழில்நுட்ப வணிக சேவை வளர்ப்பகம் / திறன்மிகு மையத்திற்கும் ரூ.50 இலட்சம் வரை மானிய உதவி அளித்தல்.



## 2.4 சந்தை வாய்ப்பு உதவி

தமிழக அரசானது குறு மற்றும் சிறுதொழில் உற்பத்தி நிறுவனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொள்வதற்கு அளிக்கும் முன்வைப்புத் தொகை செலுத்து வதிலிருந்து விலக்கு அளித்தல், மாநிலத்திலும் மற்ற மாநிலங்களிலும் நடக்கும் பொருட்காட்சிகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் சார்புடைய சங்கங்கள் கலந்து கொள்ளும் நேர்வுகளில் அரங்க வாடகையில் 50% மானியமாக வழங்குதல், பொதுவான பெயர் அல்லது பொது வணிக சின்னத்தில் விற்பனை செய்ய ஆதரவு அளித்தல் ஆகிய சந்தை வாய்ப்பு உதவிகளை வழங்கி வருகிறது.

## 2.5 பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)

'பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்' எனும் இக்கடன் வழங்கும் திட்டம், 'பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டம்' மற்றும் 'கிராம வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம்' ஆகிய இரு திட்டங்களை இணைத்து, மைய அரசால் முதல் தலைமுறை தொழில் முனைவோர்களை குறுந்தொழில் துவங்க ஆர்வம்

ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. உற்பத்தி தொழில் பிரிவின் கீழ் அமைக்கப்படும் திட்டங்களுக்கு திட்ட மதிப்பீடு அதிகபட்சம் ரூ.25 இலட்சம் ஆகும். சேவைப் பிரிவின் கீழ் அமைக்கப்படும் திட்டங்களுக்கு திட்ட மதிப்பீடு அதிகபட்சம் ரூ.10 இலட்சம் ஆகும். இத்திட்டத்தை செயல்படுத்துவதில் கதர் மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையம் தேசிய அளவிலான முகவர் அமைப்பு ஆகும். கதர் மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையம், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம், மாவட்டத் தொழில் மையங்கள் ஆகியவை வங்கிகளின் உதவியோடு இத்திட்டத்தை செயல்படுத்துகின்றன.

மேலும், திட்ட மதிப்பீட்டில் பொதுப் பிரிவின் கீழ்வரும் பயனாளிகள் 10%-ம், சிறப்பு பிரிவின் கீழ்வரும் பயனாளிகள் (பட்டியலிடப்பட்ட இனம், பட்டியலிடப்பட்ட பழங்குடியினர்/ இதர பிற்படுத்தப்பட்டோர்/ சிறுபான்மையினர் / மகளிர் / முன்னாள் இராணுவத்தினர் / மாற்றுத் திறனாளிகள்) 5%-ம் பங்களிக்க வேண்டும். மொத்த திட்ட மதிப்பீட்டில் மீதமுள்ள தொகையை, வங்கிகள் காலக்கடனாக வழங்குகின்றன.



**மைய அரசானது பயனாளிகளுக்கு கீழ்க்கண்ட விகிதத்தில் மானியங்களை வழங்குகிறது:**

| பிரிவு | நகர்புறம் | கிராமப்புறம் |
|---|---|---|
| பொதுப் பிரிவு | திட்ட மதிப்பீட்டில் 15% | திட்ட மதிப்பீட்டில் 25% |
| சிறப்புப் பிரிவு | திட்ட மதிப்பீட்டில் 25% | திட்ட மதிப்பீட்டில் 30% |

2013–14 நிதியாண்டில் மைய அரசு திட்டத்தை நிறைவேற்றும் முகமைகளுக்கு ரூ.54.92 கோடியை விளிம்புத் தொகையாக விடுவித்துள்ளது. மாநிலத்தில் 31.3.2014 வரை இத்திட்டத்தின் கீழ் 1985 பயனாளிகளுக்கு ரூ.47.38 கோடி விளிம்புத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

## 2.6 வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP)

சமூக மற்றும் பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ளவர்களிடையே குறிப்பாக படித்த வேலைவாய்ப்பில்லாத இளைஞர்களை சுய தொழில்

செய்வோர்களாக ஆக்கும் வகையில் தமிழக அரசு 2010–11ல் "வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்" எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் தொழில் முனைவோர் உற்பத்தி / சேவை / வியாபாரம் போன்ற தொழில் நிறுவனங்களை முறையே ரூ.5 இலட்சம் / ரூ.3 இலட்சம் / ரூ.1 இலட்சம் வரையான திட்ட மதிப்பீட்டில் நிறுவுவதற்கு 15% அரசு மானியத்துடன் தொழில் நிறுவனங்களை அமைக்கலாம். திட்ட மதிப்பீட்டில் பொதுப் பிரிவின் கீழ்வரும் பயனாளிகள் 10%-ம், சிறப்பு பிரிவின் கீழ்வரும் (பட்டியலிடப்பட்ட இனம், பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் / பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சிறுபான்மையினர் / மகளிர், முன்னாள் இராணுவத்தினர், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள்) பயனாளிகள் 5%–ம் பங்களிக்க வேண்டும். மொத்த திட்ட மதிப்பீட்டில் மீதமுள்ள தொகையை வங்கிகள் காலக்கடனாக வழங்குகின்றன.

31.3.2014 வரை, 4293 நபர்கள் பயனடையும் வகையில் ரூ.13.90 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.



## 2.7 புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம் பாட்டுத் திட்டம் (NEEDS)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில் முனைவோர்களாக உருவாக்கும் நோக்குடன் துவக்கப்பட்ட இத்திட்டம் 2012–13ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தெரிவு செய்யப்பட்ட தொழில் முனைவோர்களுக்கு தொழில் தொடங்க திட்டங்கள் தயாரித்தல், நிதி நிறுவனங்களில் நிதியுதவி பெற உதவுதல் மற்றும் பெருந்தொழில் நிறுவனங்களுடன் வணிகத் தொடர்பு அமைத்துத் தருவதற்கு உதவிகள் அளிக்கப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளி களுக்கு வங்கி / தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடமிருந்து காலக்கடன் பெறுவதில் உதவுவதோடு, திட்ட மதிப்பீட்டுத் தொகையில் 25% (ரூ.25 இலட்சத்திற்கு மிகாமல்) முதலீட்டு மானியம் வழங்குவதோடு வங்கிக் கடனுக்கான வட்டியில் 3% பின்முனை வட்டி மானியமாக அரசே செலுத்தும். திட்ட மதிப்பீடு குறைந்தபட்சம் ரூ.5 இலட்சத்திற்கு மேலும் அதிகபட்சம் ரூ.1 கோடிக்கு மிகாமலும் இருக்கும். திட்ட மதிப்பீட்டுத் தொகை

ரூ.1 கோடிக்கு மிகும் திட்டங்களுக்கு மானியம் ரூ.25 இலட்சம் என வரையறுக்கப்படுகிறது.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தால், ஒரு மாத தொழில்முனைவோர் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும். 2012–13–ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் மொத்தம் 1000 தொழில் முனைவோர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. மேலும், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தொழிற்பேட்டைகளிலுள்ள மனைகள்/ கூடங்களில் இடமிருக்கும் பட்சத்தில், அவர்களுக்கு 25% ஒதுக்கீடு வழங்கப்படும்.

மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியரை தலைவராகவும், மாவட்டத் தொழில் மையங்களின் பொது மேலாளர்கள் / மண்டல இணை இயக்குநரை உறுப்பினர்–அமைப்பாளராகவும், கொண்ட தேர்வுக் குழுவால் (Task Force Committee) இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்படுவர். மாநில அளவில் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர்,



இத்திட்டத்தின் முன்னேற்றத்தை சீரான கால இடைவெளியில் ஆய்வு செய்து கண்காணிக்கிறார்.

இத்திட்டத்தின் கீழ், பொதுப் பிரிவினர்–10%-ம், சிறப்புப் பிரிவினர் (பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் / பட்டியலிடப்பட்ட இனத்தவர் / பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் / மகளிர் / சிறுபான்மையினர் / முன்னாள் இராணுவத்தினர் / திருநங்கைகள் / மாற்றுத் திறனாளிகள்) – 5%-ம் திட்ட மதிப்பீட்டில் பயனாளிகளின் பங்களிப்பாக இருக்கும். மேலும், பட்டியலிடப்பட்ட இன பயனாளிகளுக்கு 18%-ம், பழங்குடியின பயனாளிகளுக்கு 1%-ம் மற்றும் மாற்றுத் திறனுடைய பயனாளிகளுக்கு 3%-ம் இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்து முன்னுரிமை வழங்கப்படும். இத்திட்டத்தில், மகளிருக்கு 50% ஒதுக்கீடு செய்து முன்னுரிமை வழங்கப்படுகிறது.

2013–14ல் இத்திட்டத்தின் கீழ் மானியங்கள் வகையில் ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2014–15ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.8 மாவட்டத் தொழில் நிறுவன வளர்ச்சி ஆலோசனை குழு

தற்போதைய, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான ஒருமுனைத் தீர்வுக் குழு தொழில் உரிமங்கள் மற்றும் அனுமதிகள் பெறுவதில் தாமதம் ஏற்படும் இனங்களில் அதனை விரைவு படுத்த கூட்டங்கள் நடத்துகிறது. சமீபத்திய நிகழ்வுகளால் இக்குழுவின் நடவடிக்கைகளை அதிகாரமுள்ளதாக ஆக்குவது தேவை என உணரப்பட்டது.

தற்போதைய ஒருமுனைத் தீர்வுக் குழுவை வலுப்படுத்தவும் மற்றும் அதன் நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்ததுவதற்காகவும் அரசு மாவட்ட தொழில் நிறுவன ஆலோசனைக் குழுவை அமைத்தது நிறுவ உத்தேசித்துள்ள தொழில் நிறுவனங்களுக்கான அனுமதிகள்/உரிமங்களைக் கோரி குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அனைத்து விண்ணப்பங்களையும் குறிப்பிடப்பட்ட பொது விண்ணப்ப படிவத்தில் மாவட்ட தொழில் மையங்களின் பொது மேலாளர்களுக்கு அனுப்ப வேண்டும். சம்பந்தப்பட்ட



துறையால் நேரடியாக பெறப்படும் விண்ணப்பங்கள் மீது வெளியிடப்பட்ட ஆணைகள் குறித்து மாதாந்திர அடிப்படையில், தொடர்புத் துறைகள் குழுவிற்கு தெரிவிக்க வேண்டும்.

மாவட்டத் தொழில் மைய பொது மேலாளர்கள் பெறப்பட்ட விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு உரிமம் மற்றும் அனுமதிகள் வழங்க வேண்டி இதற்கென அனுமதிக்கப்பட்ட கால அவகாசமான 30 நாட்களுக்குள் 60 நாட்களுக்கு மிகாமல் அனுப்ப வேண்டும். தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் நடவடிக்கைகள் வரம்புக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

உரிய காலத்தில் சம்பந்தப்பட்ட துறைகளால் உரிமங்கள் மற்றும் அனுமதிகள் வழங்கப்படாத குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் விண்ணப்பங்கள் இக்குழுவின் அடுத்த கூட்டத்தில் வைக்கப்படும். 2013–2014 ஆம் ஆண்டில் 31.3.2014 முடிய இக்குழுவால் பெறப்பட்ட 946 விண்ணப்பங்களில், 868 விண்ணப்பங்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

## 2.9 நலிவுற்ற குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை புனரமைத்தல்

நலிவுற்ற குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை புனரமைக்க உதவும் நோக்கத்துடன் பாரத ரிசர்வ் வங்கியால், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் செயலாளர் தலைமையில் ஒரு மாநில அளவிலான நிதி நிறுவனங்களுக்கிடையிலான குழு (SLIIC) அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு காலாண்டுக்கு ஒரு முறை கூட்டப்பட்டு நலிவுற்ற குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை புனரமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வு அறிக்கையினை ஆய்வு செய்து இக்குழுவின் துணைக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் நலிவுற்ற குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான புனரமைப்பு உதவிகளை முடிவு செய்யும். பாரத ரிசர்வ் வங்கியால் நடத்தப்படும் நலிவுற்ற நிறுவனங்களின் ஆய்வறிக்கையின் பேரில் வங்கிகள் நலிவுற்ற நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்குவதோடு அவை சந்தித்து வரும் இடர்பாடுகளை நீக்க தேவையான



உதவிகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கி வருகின்றன.

அரசு, நலிவுற்ற நிறுவனங்களின் புனரமைப்பை மேற்கொள்ள தீர்வு நடவடிக்கைகளை எடுத்துரைக்க ஏதுவாக அவற்றின் பிரச்சினைகளையும் நலிவுற்ற தன்மையின் தீவிரத்தையும் ஆராய்வதற்காக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் செயலர் தலைமையில் மாநில அளவிலான புனரமைப்புக்குழு (SLRC) ஒன்றை அமைத்துள்ளது. நலிவுற்ற குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் புனரமைப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் மற்றும் கண்காணிக்கவும் இக்குழு காலாண்டு அடிப்படையில் கூட்டங்களை நடத்த வேண்டும்.

## 2.10 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுவரும் கடன் உதவி

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் அமைப்பதற்கு என தொழில் முனைவோர்களுக்கு கடனுதவிகள் வழங்கி வருகின்றன. இம்மாநிலத்தில்

ஏப்ரல் 2013 முதல் மார்ச் 2014 வரையிலான காலத்தில் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு முறையே ரூ.18,591.68 கோடியும், ரூ.20,775.23 கோடியும், கடனுதவி வழங்கப்பட்டுள்ளன. ஏப்ரல் 2013 முதல் மார்ச் 2014 வரை ரூ. 39,366.91 கோடி பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு மார்ச் 2014 வரை மொத்தம் வழங்கப்பட்ட முன்பணத்தொகையில் குறுந்தொழில்களுக்கு மட்டும் வழங்கப்பட்ட முன்பணத்தொகை 47.23% ஆகும்.

### 2.11 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் வசதியாக்கக் குழுக்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் 2006–இன் படி சென்னை, திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு மண்டலங்களில் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் தாம் விற்பனை செய்த பொருட்களை வாங்கிய நிறுவனங்களிடமிருந்து வர வேண்டிய நிலுவைத் தொகைகளை விரைந்து பெற்றுத் தரும் நோக்கத்துடன் அரசு, குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான வசதியாக்கக் குழுக்களை அமைத்துள்ளது. 2013–14ஆம்



ஆண்டில் 15 வசதியாக்கக் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டு 62 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு ரூ.5.57 கோடி பெற்றுத்தரப்பட்டுள்ளது.

### 2.12 பரிசோதனை வசதிகள்

#### 2.12.1 மின் பரிசோதனை மையம், காக்களூர், திருவள்ளூர் மாவட்டம்

குறு, சிறு மற்றும் நடுத்தர மின் மற்றும் மின்னணு தொழில் முனைவோர்கள் மற்றும் தரக்குறியீடு நிறுவனங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய காக்களூரில் மத்திய மின் பொருள் சோதனைக் கூடம் 1973ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இந்த நவீன சோதனைக்கூடம், இந்திய தர நிர்ணய மையம் (பி.ஐ.எஸ்.) மற்றும் சோதனைக் கூடங்களுக்கான தேசிய அங்கீகாரக் குழுமம் (என்.ஏ.பி.எல்.) ஆகியவற்றினால் அங்கீகரிக்கப்பட்டு, மின் சாதனங்கள், மின்வடங்கள், மின் விளக்குகள், திறன் அளவீட்டு கருவிகள் போன்ற 160க்கும் மேற்பட்ட மின் மற்றும் மின்னணுச் சாதனங்கள் இந்திய தர நிர்ணய குறியீடுகள் மற்றும் மதிப்பாராய்வுக்கு இணங்க சோதனை செய்யப்படுகின்றன.

இச்சோதனைக் கூடம் மூலம் இந்திய தர நிர்ணய நிறுவனம், மைய அரசின் பொருட்கள் வழங்கல் துறை, தரக் கட்டுப்பாடு மற்றும் தரக் குறியீட்டு நிறுவனங்கள், தனியார் உற்பத்தியாளர்கள், மத்திய / மாநில அரசுத் துறைகள் மற்றும் அரசுத் துறை நிறுவனங்கள் பெரிதும் பயனடைகின்றன. இச்சோதனைக் கூடத்தில் 2013–14ஆம் ஆண்டில் 5841 மின்பொருட்கள் சோதனை செய்யப்பட்டு அதன் மூலம் ரூ.2.39 கோடி அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

### 2.12.2 இரசாயனப் பரிசோதனைக் கூடங்கள்

தொழில் நிறுவனங்களுக்கு குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஒருங்கிணைந்த பரிசோதனை வசதிகளை அளிக்கும் பொருட்டு ஐந்து பரிசோதனைக் கூடங்கள் சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. தொழில் வணிகத் துறையால் வழங்கப்படும் தொழில் முனைவோர் பதிவறிக்கை பகுதி–II பெற்றுள்ள, குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு பரிசோதனைக் கட்டணத்தில் 50% சலுகை வழங்கப்படுகிறது.



சென்னை ஆய்வு கூடத்தில் உள்ள தொழில்நுட்ப நூலகத்தில் பகுப்பாய்வக வேதியியல், இரசாயன பொறியியல் தொழிற்கூட வேதியியல் சார்ந்த புத்தகங்கள் மற்றும் சிறு தொழில் திட்ட விவர அறிக்கை மற்றும் இந்திய, பிரிட்டன் தர நிர்ணய குறியீடுகள் மற்றும் மருந்து சார்ந்த குறிப்பேடுகள் உள்ளன. 2013–14ஆம் ஆண்டில் இந்த ஆய்வகங்கள் 81,451 மாதிரிகளைப் பரிசோதனை செய்து அரசுக்கு ரூ.2.44 கோடி வருவாய் ஈட்டியுள்ளது.

### 2.13 தொழில்நுட்ப பயிற்சி நிலையங்கள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி கீழ்க்காணும் மூன்று பயிற்சி நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.3 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது:

| | | |
|---|---|---|
| 1. | அரசு தொழில்நுட்ப பயிற்சி மையம், கிண்டி | ரூ.120 இலட்சம் |
| 2. | கருவிப் பொறியியல் மையம், திண்டுக்கல். | ரூ.95 இலட்சம். |
| 3. | பீங்கான் தொழில்நுட்ப பயிற்சி நிலையம், விருத்தாசலம் | ரூ.85 இலட்சம். |

**2.13.1 அரசு தொழில்நுட்ப பயிற்சி மையம், கிண்டி, சென்னை**

கிண்டி, அரசினர் தொழில் நுட்ப பயிற்சி மையம் 1962–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 50 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வரும் இம்மையம் கீழ்க்காணும் 3 ஆண்டு பட்டயப் படிப்புகளை வழங்கி வருகிறது.

1. இயந்திரவியல் பொறியியல் பட்டயம் (கருவி மற்றும் அச்சு)
2. இயந்திரவியல் பொறியியல் பட்டயம் (குளிர்சாதனம் மற்றும் காற்று பதனம்)

கருவி மற்றும் அச்சு பிரிவில் அனுமதிக்கப்படும் 40 மாணவர்கள் என்பதை 60 மாணவர்கள் என்றும் குளிர்சாதனம் மற்றும் காற்று பதனம் பிரிவில் அனுமதிக்கப்படும் 30 மாணவர்கள் என்பதை 40 மாணவர்கள் என்றும் உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறாக ஆண்டொன்றிற்கு 100 பட்டயப் படிப்பு மாணவர்களை உருவாக்குகிறது. இப்பட்டயப்படிப்புகள் அகில இந்திய தொழில் நுட்ப கல்வி நிறுவன (AICTE) அங்கீகாரத்துடன் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பயிற்சி நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.120 இலட்சம் முழுவதுமாக பயன்படுத்தப்பட்டு மேம்பாட்டுப் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன.



**2.13.2 கருவிப் பொறியியல் பயிலகம், திண்டுக்கல்**

திண்டுக்கல் கருவி பொறியியல் பயிலகம் 1961–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கும் இப்பயிலகம் பொறியியலில் மூன்று ஆண்டு கருவி மற்றும் அச்சு பட்டயப்படிப்பை வழங்கி வருகின்றது. இந்நிறுவனம் ஆண்டொன்றிற்கு சராசரியாக 44 பட்டயப் படிப்பு பொறியாளர்களை உருவாக்குகிறது. இப்பட்டயப் படிப்பு அகில இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் (AICTE) அங்கீகாரத்துடன் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பயிற்சி நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.95 இலட்சம் முழுவதுமாக பயன்படுத்தப்பட்டு மேம்பாட்டுப் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன.

### 2.13.3 பீங்கான் தொழில்நுட்ப பயிற்சி நிலையம், விருத்தாசலம்

விருத்தாசலத்திலுள்ள பீங்கான் தொழில் நுட்பப் பயிற்சி நிலையம், பீங்கான் தொழில் நுட்பவியலில் பட்டயப்பயிற்சி நடத்திவருகிறது. இப்பட்டயப் படிப்பின் கால அளவு 3½ ஆண்டுகள் ஆகும். இந்த பயிற்சி நிலையத்தில் ஒவ்வொரு வருடமும் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 50 மாணவர்கள் முதலாமாண்டிலும், பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 10 மாணவர்கள் இரண்டாம் ஆண்டில் (பிற்சேர்க்கை) மூலம் சேர்க்கப்படுகிறார்கள். இப்பயிற்சி நிலையத்தித்துக்கு ஒதுக்கப்பட்ட ரூ.85 இலட்சம் முழுவதும் செலவிடப்பட்டு மேம்பாட்டு பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன.

### 2.13.4 அரசினர் அறிவியல் கண்ணாடிப் பயிற்சி மையம், கோயம்புத்தூர்

மாணவர்களுக்கு அறிவியல் கண்ணாடி உற்பத்தி செய்வதற்கு தேவையான செயல்முறை பயிற்சி வழங்குவதற்காக அரசினர் அறிவியல் கண்ணாடி பயிற்சி மையம் 1950ஆம் ஆண்டு கிண்டி, சென்னையில் துவக்கப்பட்டது. இப் பயிற்சியின் கால அளவு இரண்டு



ஆண்டுகள் ஆகும். இப்பயிற்சியில் மாணவர்கள் சேர்க்கை குறைவாக இருந்த காரணத்தால் இம் மையம் கோயம்புத்தூருக்கு மாற்றப்பட்டு பயிற்சியை துவக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 2.13.5 அரசு அறிவியல் கண்ணாடி கருவிகள் உற்பத்தி மையம், கோயம்புத்தூர்

அரசினர் அறிவியல் கண்ணாடி கருவிகள் உற்பத்தி மையம் 1972–ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது. இம்மையம் வேளாண்மை துறை மற்றும் தடய அறிவியல் துறை போன்ற நிறுவனங்களின் பரிசோதனை கூடங்களுக்கு தேவையான அறிவியல் கண்ணாடி உபகரணங்கள் தயாரிப்பதில் ஈடுபட்டுவருகிறது.

### 2.13.6 மின் மற்றும் மின்னணு தொழில்களுக்கான அடிப்படை விவர வங்கி மற்றும் தகவல் மையம், சென்னை

இம்மையம் மின் மற்றும் மின்னணு நிறுவனங்கள் குறித்த விவரங்கள் அவற்றுக்கான திட்டங்கள் பற்றிய திட்டக் குறிப்புக்களை வழங்குவதோடு இத்துறையில், வாங்குவோர்–விற்போரை, தொழில் முனைவோர் கண்டறிவதற்காக மாநில அளவிலான குறிப்பேட்டையும்

பராமரித்து வருகிறது. இம் மையத்தில் தொழில்நுட்ப நூலகம் ஒன்று 1517 புத்தகங்கள் மற்றும் 70 சஞ்சிகைகளைக் கொண்டு இயங்கி வருகிறது.

## 2.14 தரக்கட்டுப்பாடு ஆணைகளின் அமலாக்கம்

தொழில் வணிக ஆணையரகத்தின் கீழ் வரும் இம் மையம் தமிழ்நாட்டில் நுகர்வோரிடையே, தரமான மின்பொருட்களை உபயோகப்படுத்துதல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, இயங்கி வருகிறது. ஆணையரகத்தின் மின் மற்றும் மின்னணு பிரிவு வீட்டு உபயோக மின் சாதனங்களின் தரக்கட்டுப்பாட்டு ஆணை, 1981 மின்கம்பிகள் மற்றும் வடங்கள், வீட்டு உபயோக பொருட்கள் மற்றும் மின் பாதுகாப்புக் கருவிகள் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள் (தரக்கட்டுப்பாடு) 2003 ஆகிய இரண்டு ஆணைகளை நடைமுறைப்படுத்துகிறது. மேற்கூறிய முதல் ஆணையினை மீறி செயல்படுவது அத்தியாவசிய பொருட்கள் சட்டம் 1955இன்படி தண்டனைக்குரியதாகும். இரண்டாவது ஆணை இந்திய தரக்குறியீடு முத்திரை (ஐ.எஸ்.ஐ.) இல்லாத குறிப்பிட்ட சில மின்பொருட்களைத் தயாரிப்பதையும், அவற்றை விற்பனைக்குச் சேமித்து வைப்பதையும் அல்லது



விநியோகிப்பதையும் தடை செய்கிறது. இந்த ஆணைக்கு மாறாகச் செயல்படுவது இந்திய தர நிர்ணய (பி. ஐ. எஸ்.) சட்டத்தின் கீழ் தண்டனைக்குரியதாகும்.

இந்த ஆணைகளை அமல்படுத்த “உரிய அலுவலர்” ஆக மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மைய பொது மேலாளர்களும் துணை இயக்குநர் (மின் மற்றும் மின்னணு), தரக்கட்டுப்பாட்டு மையம், சென்னை அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். 2013-14 ஆம் ஆண்டில் 1963 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதோடு 76 பறிமுதல்கள் செய்யப்பட்டு குற்றவியல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

பொது மக்களிடையே இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன் விளம்பரங்கள் மற்றும் பத்திரிகைச் செய்திகள் சென்னையிலுள்ள துணை இயக்குநர் (மின் மற்றும் மின்னணு) அலுவலகம் மற்றும் மண்டல அளவிலான அலுவலகங்கள் மூலமாக வெளியிடப்படுகின்றன.

### 2.14.1 இரும்பு மற்றும் இரும்பு பொருட்கள் (தரக்கட்டுப்பாடு) ஆணை, 2012

இந்திய அரசின் இரும்புக்கான அமைச்சகம், தரமான இரும்பு மற்றும் இரும்பு பொருட்கள் நுகர்வோர்களுக்கு கிடைப்பதற்கு ஏதுவாக இரும்பு மற்றும் இரும்பு பொருட்களுக்கு இரண்டு தரக்கட்டுப்பாடு ஆணைகளை அறிவித்துள்ளது. இந்த ஆணைகளில் 16 இரும்பு மற்றும் இரும்பு பொருட்களுக்கு ஐ. எஸ். ஐ. இந்திய தர சான்றிதழ் முத்திரை அத்தியாவசியமாக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைகளின்படி எந்த ஒரு நபரும் ஆணையில் குறிப்பிட்டுள்ள இரும்பு மற்றும் இரும்பு பொருட்களை, இந்திய தர சான்றிதழ் நிறுவனத்தின் மூலம் வழங்கப்படும் தர சான்றிதழ் மற்றும் ஐ. எஸ். ஐ. முத்திரை இன்றி, உற்பத்தி செய்வதற்கும், விற்பனைக்குச் சேமிப்பதற்கும் மற்றும் விநியோகிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையினை செயல்படுத்த "உரிய அலுவலர்" ஆக மாவட்டத் தொழில் மைய பொது மேலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.



மாவட்டத் தொழில் மைய பொது மேலாளர்கள் இரும்பு மற்றும் இரும்பு பொருட்கள் தரக்கட்டுப்பாடு ஆணையினை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக மைய அரசால் வெளியிடப்படும் அறிவிக்கைகள் குறித்து செய்தித்தாள் மற்றும் மாவட்டத் தொழில் நிறுவனங்கள் சங்கத்தின் சஞ்சிகைகளில் செய்தி வெளியிடுவதன் மூலம் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றனர்.

## 2 .15 அரசு தொழிற்பேட்டைகள்

### 2 .15 .1 பீங்கான் தொழிற்பேட்டை, விருத்தாச்சலம்

பீங்கான் உற்பத்தியாளர்கள் பயன்பெறுவதற்காக விருத்தாச்சலத்தில் பீங்கான் தொழிற்பேட்டையை அரசு நிறுவியது. இத்தொழிற்பேட்டையில் 64 தொழிற்கூடங்கள் உள்ளன. இத்தொழிற்கூடங்கள் தொழில்முனை வோருக்கு, சதுரஅடி ஒன்றுக்கு மாதம் ரூ. 1.75 வீதம் வாடகைக்கு விடப்பட்டுள்ளது. இத்தொழிற்பேட்டையில் உள்ள தொழிலகங்கள் குறைந்த மின் அழுத்த கடத்தாப் பொருட்கள். பீங்கான் பொம்மைகள், உயர் வெப்பம் தாங்கக் கூடிய செங்கற்கள் மற்றும் இதர பீங்கான்

பொருட்கள் உற்பத்தி செய்கின்றன. இத்தொழிற்பேட்டை இப்பகுதியின் கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்த உதவுகிறது.

**2.15.2 மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டைகள்**

அரசு, 517 மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் 140 தொழிற்கூடங்களுடன் மின் மற்றும் மின்னணு தொழில்களுக்கென எட்டு தொழிற்பேட்டைகளை அமைத்துள்ளது. இத்தொழிற்பேட்டைகள் திருவான்மியூர் (சென்னை மாவட்டம்). பெருங்குடி(காஞ்சிபுரம் மாவட்டம்), காக்களூர் (திருவள்ளூர் மாவட்டம்), கப்பலூர் (மதுரை மாவட்டம்), சூரமங்கலம் (சேலம் மாவட்டம்), காளப்பட்டி (கோயம்புத்தூர் மாவட்டம்), ஒசூர் (கிருஷ்ணகிரி மாவட்டம்) மற்றும் துவாக்குடி (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.

3.10.2013ஆம் நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையின் அரசாணை (நிலை) எண் 51–இல் ஒசூர், சேலம் மற்றும் மதுரை ஆகிய 3 இடங்களிலுள்ள மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டைகள் மற்றும் விருத்தாசலத்திலுள்ள பீங்கான் தொழிற்பேட்டை



ஆகியவற்றின் கட்டமைப்பு வசதிகளை ரூ.2 கோடி செலவில் மேம்படுத்துவதற்காக அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**2.16 மாவட்டத் தொழில் மையங்களை மறுசீரமைத்தல்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க மாநிலத்திலுள்ள 32 மாவட்ட தொழில் மையங்கலும், ரூ.50 கோடி செலவில் மறுசீரமைக்கப்படும் என 17.1.2013ஆம் நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை எண் 7ல் அரசு ஆணையிட்டுள்ளது.

**2.16.1 உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல்**

தற்போது வாடகை கட்டிடத்தில் இயங்கி வரும் 11 மாவட்ட தொழில் மைய அலுவலகங்களுக்கு புதிய கட்டிடங்கள் கட்ட ரூ.16.50 கோடியை அரசு வழங்கியுள்ளது.

2013–14ஆம் ஆண்டில் புதிய கட்டடங்களுக்காக ரூ.11.25 கோடி செலவிடப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25.6.2014 அன்று

காணொலி காட்சி மூலம் திருப்பூர், நாகப்பட்டினம், நாமக்கல், திருவாரூர் மற்றும் தேனி ஆகிய 5 மாவட்ட தொழில் மையங்களுக்கான புதிய கட்டடங்களை திறந்து வைத்தார்கள். மேலும், 18 மாவட்டங்களிலுள்ள மாவட்ட தொழில் மைய அலுவலகங்களில் கூடுதல் கட்டடங்கள் கட்ட ரூ.18 கோடியும் மற்றும் இங்கு ஏற்கனவே உள்ள அலுவலக கட்டடங்களை பழுது பார்த்து, புதுப்பிப்பதற்காக ரூ.4.50 கோடியையும் வழங்கியுள்ளது. இதுவரையில் மேற்கூறிய பணிகளுக்காக ரூ.11.46 கோடி செலவிடப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25.6.2014 அன்று காணொலி காட்சி மூலம் கடலூர், திண்டுக்கல், கிருஷ்ணகிரி, சேலம், மதுரை, தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகிய 7 மாவட்ட தொழில் மையங்களுக்கான கூடுதல் கட்டடங்களை திறந்து வைத்தார்கள். மேலும், 3 மாவட்ட தொழில் மையங்களிலுள்ள கட்டடங்களைப் புதுப்பிக்க அரசு ரூ.2.42 கோடி வழங்கியுள்ளது. ரூ.1.37 கோடி செலவிடப்பட்டு மேற்கூறிய பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.



இப்புதிய உத்தேச கட்டிடங்களில் அலுவலக பணியாளர்கள் மற்றும் அலுவலகத்திற்கு வருகை தரும் தொழில் முனைவோர் ஆகியோர்களின் வசதிக்காக கருத்தரங்கு கூடம், காணொலிக் காட்சி வசதி, உற்பத்திப் பொருட்கள் காட்சி மையம் மற்றும் கணினி மையம் போன்ற தேவைப்படும் அனைத்து வசதிகளும் கொண்டிருக்கும்.

**2.16.2 திறன் வளர்த்தல்**

தொழில் வணிகத் துறையின் 32 மாவட்ட தொழில் மையங்களில் பணியாற்றும் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தொழில் நுட்பம் மற்றும் மேலாண்மைப் பயிற்சி வழங்கி திறன் வளர்த்தலுக்காக அரசு, ரூ.3.28 கோடியை வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் வெளி மாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளுக்குச் சென்று அங்கு மேற்கொள்ளப்படும் புதுமையான மற்றும் வெற்றிகரமாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி அறிந்து கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது போன்று குறு, சிறு தொழில் சங்கங்கள் மற்றும் தொழில் முனைவோர்கள்

பயன் பெறும்பொருட்டு, மாவட்டங்களுக்கு மட்டுமே உரித்தான தொழில் நடவடிக்கைகள் குறித்த இந்தியா மற்றும் உலகளவிலான தொழில் வளர்ச்சியின் தற்போதைய முன்னேற்றங்கள் குறித்த கருத்தரங்கங்கள் மற்றும் பயிற்சி வகுப்புகளை நடத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது வரை 283 நபர்களுக்கு ரூ.21.06 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### 2.16.3 மாவட்டத் தொழில் மையங்களின் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் வலுவூட்டுதல்

அரசு, அனைத்து மாவட்ட தொழில் மையங்களில் உள்ள தகவல் தொழில் நுட்ப வசதி மற்றும் தகவல் தொடர்பு வசதிகளை மேம்படுத்த ரூ.4.80 கோடி வழங்கியுள்ளது. மாவட்டத் தொழில் மைய அலுவலகப் பணியாளர்களுக்கும் தொழில் முனைவோர்களுக்கும் தேவையான வசதிகளை செய்துகொடுக்கும் வகையில் அவைகளுக்கு கூடுதல் கணினி வசதிகள், வலைதளங்கள் மற்றும் மென்பொருள் உருவாக்குதல் போன்றவற்றை வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.



இப்பணிக்காக இது வரை ரூ.15 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

## 2.17 தொழிற் கூட்டுறவு சங்கங்கள்

மாநிலத்தில், வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்கத்துடன் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இது தவிர கிராமப்புற கைவினைஞர்கள், வேலையாட்கள் மற்றும் தொழிலாளர்கள் போன்ற பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவு மக்களை இடைத்தரகர்களின் பிடியிலிருந்து காப்பாற்றி லாபகரமான வேலை வாய்ப்பினை நல்கி அவர்களின் நலன் காக்கிறது. இச்சங்கங்கள், சிறு தேயிலை விவசாயிகள், மரவள்ளி கிழங்கு பயிரிடுவோர்களுக்கு நியாயமான விலை கிடைப்பதை உறுதி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. மேலும், ஏழை தொழில்முனைவோர்கள் இத்தகைய தொழிற்பேட்டைகளில் தொழில் தொடங்கும் வாய்ப்பை ஏற்படுத்துகின்றன. இத்தகைய கூட்டுறவு தொழில் பேட்டைகள் ஏழைத் தொழில் முனைவோர் தொழில்

நிறுவனங்களை துவக்க மேம்படுத்தப்பட்ட மனைகள் கட்டப்பட்ட தொழில் கூடங்கள் மற்றும் கட்டமைப்பு வசதிகளை அளிப்பதன் மூலம் இசைவான சூழலை குறிப்பாக கிராமப்புற மகளிருக்கு ஏற்படுத்தித் தருகின்றன. தேயிலை, ஜவ்வரிசி, தீப்பெட்டி, கயிறு, வங்கி, பாலித்தீன், கைவினைப் பொருட்கள், தையல், ஒப்பந்த தொழிலாளர் சேவை, அச்சு, ஆட்டோ சேவை, பொறியியல், உலோகம், தொழிற் பேட்டைகள் மற்றும் சிறப்பு வகைகளான பாம்பு பிடிப்போர், பூட்டு தயாரிப்பு, சரக்கு போக்குவரத்து முதலான பிரிவுகளிலும் இவ்வகையான தொழிற் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்கள் மாநிலத்திலுள்ள தொழில் கூட்டுறவு சங்கங்களின் செயல் பதிவாளர் ஆவார். இத்துறையின் கீழ், **31.3.2014** அன்று வரை **322** தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் **268** சங்கங்கள் இலாபத்தில் மொத்தமாக இயங்கி வருகின்றன. **2013–14**ல் அனைத்து சங்கங்களும் மொத்தமாக ரூ.**923.78** கோடி மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளன.



மேலும், இச்சங்கங்கள் ரூ.**16.85** கோடி ஊதியம் வழங்கி ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டோர்க்கு வேலை வாய்ப்பினை அளித்துள்ளன.

## 2.18 தேயிலைப் பிரிவு

கூட்டுறவு தொழிற்சங்கங்கள் நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு தேயிலை விவசாயிகளின் நலனில் முக்கிய பங்கு வகிக்கிறது. நீலகிரி மாவட்டத்தில் மொத்தமுள்ள **63,000** சிறு தேயிலை விவசாயிகளில் **24,000**க்கும் மேற்பட்ட விவசாயிகள் தொழிற் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர். தனியார் தொழிற்சாலைகளின் பிடியிலிருந்து சிறு தேயிலை விவசாயிகளை பாதுகாக்கும் பொருட்டும், அவர்களின் பசுந்தேயிலைக்கு நியாயமான விலை கிடைத்திட வகை செய்யும் நோக்கத்திலும் இவ்வாறான தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. **1961**ஆம் ஆண்டு குந்தாவில் ஆரம்பிக்கப்பட்ட முதல் தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையின் வெற்றிகரமான செயல்பாட்டினைத் தொடர்ந்து, இது

போன்ற பல கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

### 2.18.1 தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள்

நீலகிரி மாவட்டத்தில் தற்பொழுது 15 தொழில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் (இணைப்பு – அ) 24,179 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. வருடத்திற்கு 188 இலட்சம் கிலோ தேயிலைத் தூள் உற்பத்தி செய்யும் தொழில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளின் திறன் மாநிலத்தின் உற்பத்தி மொத்த தேயிலை தூள் உற்பத்தியில் 17% ஆகும். இத்தொழிற்சாலைகள் சிறு தேயிலை விவசாயிகளின் பசுந்தேயிலைக்கு நியாயமான விலையை பெற்றுத் தருவதோடு அல்லாமல், அதன் உறுப்பினர்களுக்கு உரங்கள், தேயிலை கன்றுகள், பசுந்தேயிலை சேகரிக்கும் பைகள் வழங்குதல் போன்ற சேவைகளையும் செய்து வருகின்றன.

### 2.18.2 பசுந்தேயிலை எடையிடுதலை மேம்படுத்துதல்

தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் தற்பொழுது நடைமுறையில் உள்ள பசுந்தேயிலை



சேகரிக்கும் மற்றும் எடையிடும் நுட்பத்தில் உள்ள குறைபாடுகள் புகார்களுக்கு இடமளிப்பதாய் உள்ளன. தேயிலை சேகரிப்பை நியாயமான மற்றும் ஒளிவு மறைவற்ற வகையில் செய்யவும் மற்றும் கணக்கிடுதலை குறைந்த நேரம் மற்றும் செலவில் செய்யவும் ஏதுவாக 7 தேயிலை தொழிற்கூட்டுறவு தொழிற்சாலைகளில் 100 மின்னணு தராசுகளை வாங்கி நிறுவ அரசு ரூ.50 இலட்சம் வழங்கியுள்ளது.

### 2.18.3 நஞ்சநாட்டில் புதிய தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலை அமைத்தல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி நீலகிரி மாவட்டம், நஞ்சநாடு பகுதியில் புதிய தேயிலைத் தொழிற்சாலை ஒன்று ரூ.5 கோடி செலவில் அமைக்க அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கான அடிக்கல்லை 4.1.2014 அன்று நாட்டினார்கள். ‘நபார்டு’வங்கி ஏற்கனவே ரூ.2.50 கோடி காலக்கடனாக வழங்கியுள்ளது. மாநில அரசின் பங்கு மூலதனம் ரூ.2 கோடியும் உறுப்பினர்களின் பங்கு மூலதனம் ரூ.50 இலட்சமாகும். இத்தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகள் பொதுப்பணித் துறையிடம்

ஒப்படைக்கப்பட்டு இயந்திரங்கள் கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இத் தொழிற்சாலை ஆரம்பிப்பதன் மூலம் சுமார் 1800 சிறு தேயிலை விவசாயிகள் பயனடைவர்.

### 2.18.4 இண்ட்கோசர்வ் ( Indcoserve )

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை தொழிற்சாலை கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், இவைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க ஒரு உயர்மட்ட அமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது. இந்நோக்கத்தின் அடிப்படையில் ‘இண்ட்கோசர்வ்’என்று பரவலாக அழைக்கப்படும் தமிழ்நாடு சிறுதேயிலை விவசாயிகளின் தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் இணையம், 1965–இல் உருவாக்கப்பட்டது. கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கு தேவையான பொருள்களை கொள்முதல் செய்து வழங்குவதோடு அல்லாமல், இச்சங்கம் உறுப்பினர் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப்படுத்தி, அதன் மூலம் நியாயமான விலை கிடைக்க வழிவகை செய்திறது. வணிகச் சின்னம் பதித்த மற்றும் வணிகச் சின்னம்



பதிக்காத தேயிலைத் தூள் மற்றும் பொட்டலம் பொதியப்பட்ட, பொதியப்படாத தேயிலைத் தூளை இந்தியா மற்றும் வெளிநாட்டில் விற்பனை செய்வதும் இச்சங்கத்தின் மற்றொரு நோக்கமாகும். அத்துடன், குன்னூர், கோயமுத்தூர் மற்றும் கொச்சி ஆகிய இடங்களில் உறுப்பினர் தொழிற்சாலைகளுக்கு சேமிப்பு கிடங்கு வசதிகளையும் வழங்குகிறது. இண்ட்கோசர்–வானது பொது விநியோக திட்டத்தின் மூலம் ஊட்டி டீ என்ற பெயரில் தேயிலைத் தூளை நியாய விலைக்கடைகள் மூலம் விற்பனை செய்வதோடு நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் எப்பொழுதும் சந்தையில் ஊட்டி டீ கிடைப்பதையும் உறுதி செய்கிறது. சிறு தேயிலை விவசாயிகளின் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதில் இண்ட்கோசர்வ் மற்றும் தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் ஆற்றிவரும் பணிகள் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### 2.18.5 டீசர்வ் ( Teaserve )

தேயிலை ஏலமுறையில் வெளிப்படையான தன்மை மற்றும் நல்ல விலை பெறும் நுட்பம் அடையும் நோக்கத்தில் டீசர்வ் என அழைக்கப்படும் மின்னணு ஏல மையம்

2002–இல் பதிவு செய்யப்பட்டு 2003 முதல் குன்னூரில் செயல்பட தொடங்கியது. இச்சங்கத்தில் தொழிற் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள், தனியார் தேயிலைத் தொழிற்சாலைகள் மற்றும் 'டான்டீ' ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். வெளிப்படையான முறையில் ஏலத்தை நடத்தவும், இடைத்தரகர்களை நீக்கி, அதன் மூலம் தேயிலைத்தூளுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்வதை இந்த ஏலமையம் உறுதி செய்கிறது. இதன்மூலம் சிறு தேயிலை விவசாயிகள் தங்களது பசுந்தேயிலைக்கு தகுந்த விலை பெற்று பயனடைய முடியும்.

### 2.18.6 சேகோசர்வ் (Sagoserve)

சவ்வரிசி மாவு மற்றும் மரவள்ளிக் கிழங்கு உற்பத்தி செய்யும் மாவட்டங்களிலுள்ள உற்பத்தியாளர்கள் தங்களது உற்பத்திப் பொருட்களான சவ்வரிசி மற்றும் கிழங்கு மாவினை சந்தைப்படுத்துவதிலும் மற்றும் நிதி வசதி பெறுவதிலும் பலவகையான இடையூறுகளை சந்தித்து வந்தனர். திட்டமிடப்பட்ட அமைப்பு ரீதியிலான சந்தை வாய்ப்பு முறையோ மற்றும் சேமிப்பு கிடங்கு



வசதியோ இல்லாத நிலையில் வியாபாரிகள் உற்பத்தியாளர்களின் பொருட்களுக்கு குறைந்த விலையை வழங்கி வந்த சூழ்நிலையில் இடைத்தரகர்கள் உற்பத்தியாளர்களை சுரண்டி வந்தனர். இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு, "சேகோசர்வ்" என்று பரவலாக அனைவராலும் அழைக்கப்படும் சேலம் ஸ்டார்ச் மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர்கள் தொழிற் கூட்டுறவு சங்கம் 1981ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. சேகோசர்வ் உருவான பிறகு, உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் கிழங்கு மாவு மற்றும் சவ்வரிசி பொருட்களுக்கு உயர்ந்த சந்தை விலை பெறும் வாய்ப்பு, குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்ததோடு மட்டுமல்லாமல், இடைத்தரகர்கள் முழுவதுமாக நீக்கப்பட்டனர்.

உறுப்பினர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை பரிசோதனை செய்வதில் ஏற்படும் இன்னல்களை களைவதற்கு ஏதுவாக சேகோசர்வ் தனது சொந்த பரிசோதனைக் கூடத்தினை குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் – குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சவ்வரிசிக் குழுமம் (பகுதி I) மைய அரசின் நிதியுதவியுடன்

பகுப்பாய்வு கூடம் ஒன்றை பொது வசதி மையமாக ஏற்படுத்தியுள்ளது. இருந்தபோதிலும் மைய அரசானது பரிசோதனைக்கூட கருவிகள் வாங்குவதற்கும், காணொலி காட்சி அரங்கம் அமைப்பதற்கும், பொதிவு இயந்திரங்கள் நிறுவுவதற்கும் மற்றும் சவ்வரிசி மூட்டைகளை ஏற்றி இறக்குவதற்கான கன்வேயர் அமைப்பை நிறுவுவதற்கும் ரூ. 2.47 கோடியை குழும திட்டத்தின் கீழ் (பகுதி II) அனுமதி அளித்துள்ளது.

### 2.18.7 தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி (தாய்கோ வங்கி)

தொழிற்கூட்டுறவு சங்கங்களின் கடன் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு "தாய்கோ வங்கி" என்று பரவலாக அழைக்கப்படும் தமிழ்நாடு தொழிற்கூட்டுறவு வங்கி 1961–இல் தொடங்கப்பட்டது. 415 சங்க உறுப்பினர்களுடன் இயங்கும் இவ்வங்கி அரசின் பங்குத் தொகை ரூ.2.68 கோடி உட்பட மொத்தம் ரூ.6.49கோடி பங்கு மூலதனத்தைக் கொண்டுள்ளது. சென்னையைத் தலைமையிடமாக கொண்ட இவ்வங்கி, தமிழகம் முழுவதும் 44 கிளைகளுடன் செயல்பட்டு வருகிறது (இணைப்பு ஆ). இவ்வங்கியின் முக்கிய



குறிக்கோள் இத்துறையின் கீழ் செயல்படும் தொழிற் கூட்டுறவு சங்கங்களின் நிதித் தேவைகளை பூர்த்தி செய்வதுதான் என்றாலும், தற்பொழுது இவ்வங்கி பல்வேறு விதமான கடன் வசதிகளையும், தனிநபர்கள், தொழில் முனைவோர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர்களுக்கும் வழங்கி வருகிறது. ரிசர்வ் வங்கியினால் அங்கீகரிக்கபட்ட இவ்வங்கி, பொதுமக்களிடமிருந்து வைப்புத் தொகைகளைப் பெற்றும் அவர்களுக்கென சேமிப்பு மற்றும் நடப்பு கணக்கு வசதிகளை வழங்கியும் வருகிறது. மேலும், இவ்வங்கியானது மாநிலத்தில் டாம்கோ, தாட்கோ மற்றும் டாப்செட்கோ ஆகிய அரசு நிறுவனங்களின் திட்டங்களை செயல்படுத்தும் முகமைகயாகவும் விளங்குகிறது. தவிர, இத்துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம், வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம், பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் மற்றும் கயிறு வாரிய திட்டமான REMOTE ஆகிய திட்டங்களுக்கும் நிதி உதவிகளை வழங்கி வருகிறது.

### 2.18.8 கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்கள்

மாநிலத்தில், பெருவாரியான மக்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்குவதில் கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. கேரளா மாநிலத்திற்கு அடுத்தபடியாக கயிறு தொழிலில் தமிழகம் இரண்டாவது இடத்தில் இருந்தாலும், பழுப்பு நிற நார் உற்பத்தியில் நாட்டிலேயே முதல் இடத்தில் உள்ளது. தேங்காய் மட்டை தேசிய அளவில் 40% பயன்படுத்தப்பட்டபோதிலும், தமிழகத்தில் அதன் பயன்பாடு 48% ஆகும். தமிழ்நாட்டில் கயிறு பொருட்களின் ஏற்றுமதி ஒவ்வொரு வருடமும் படிப்படியாக அதிகரித்து வருகிறது. தென்னை நார், நார்க் கழிவுக்கட்டி, சுருள் கயிறு, மிதியடிகள், தரை விரிப்புகள் மற்றும் இரப்பர் பால் கலந்த மெத்தைகள் போன்றவற்றை பெருமளவில் ஏற்றுமதி செய்கிறது. கயிறு தொழிற்சாலைகள், தனியார் மற்றும் கூட்டுறவு துறைகளில் செயல்பட்டு வருகின்றன. இத்துறையின் கீழ் 69 கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்கள் 11,644 உறுப்பினர்களின் நலனுக்காக அரசின் பங்கு ரூ.2.62 கோடி உட்பட மொத்த மூலதனம் ரூ.3.06 கோடியுடன்



இயங்கி வருகின்றன. உறுப்பினர் சங்கங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப்படுத்தவும் மற்றும் அச்சங்கங்களுக்கு தேவையான மூலப் பொருட்களை கொள்முதல் செய்வதை எளிமையாக்கும் நோக்கத்திற்காகவும் “டான்கோபெட்” என்று அழைக்கப்படும் தமிழ்நாடு கூட்டுறவு கயிறு விற்பனை இணையம் சென்னையில் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

### 2.18.9 கயிறு கூட்டுறவு சங்கங்களுக்கு சந்தை மேம்பாட்டு உதவி

நாட்டில் தென்னை நார் மற்றும் கயிறு பொருட்களின் உபயோகத்தினை ஊக்குவிப்பதற்காகவும், கயிறு தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பினை வழங்கும் பொருட்டும், மைய அரசு கயிறு வாரியத்தின் மூலமாக கயிறு சங்கங்களுக்கு சந்தை மேம்பாட்டு உதவி திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தி, அதன் மூலம் கயிறு சங்கங்களின் முந்தைய 3 ஆண்டு கால மொத்த விற்பனையின் சராசரி மதிப்பில் 10% மானியமாக வழங்குகிறது. இச்சந்தை மேம்பாட்டு உதவி, மத்திய மற்றும் மாநில அரசுகளால் சரிசமமாக பங்கிட்டு

கொள்ளப்படுகிறது. 2013–14ஆம் ஆண்டுக்கான சந்தை மேம்பாட்டு நிதி உதவி திட்டத்தின்கீழ், மாநில அரசு தன்பங்காக ரூ.65.12 இலட்சத்தினை 64 கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கியுள்ளது. மைய அரசின் பங்கான ரூ.65.12 இலட்சத்தினை மைய அரசிடமிருந்து பெற்று இச்சங்கங்களுக்கு வழங்கியுள்ளது.

### 2.18.10 பாரம்பரிய தொழில்களுக்கு புத்துயிர் ஊட்டும் நிதியுதவி வழங்கும் திட்டம் (SFURTI)

மைய அரசு, பாரம்பரிய தொழில்களை புத்துயிர் ஊட்டும் நிதியுதவி வழங்கும் திட்டம் (ஸ்பூருட்டி) என்ற திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பொது வசதி மையம் அமைத்தல், சந்தை வசதி மேம்பாடு, திறன் வளர்த்தல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டமானது கயிறு மற்றும் கிராமத் தொழில்களை உள்ளடக்கியது. XII–வது ஐந்தாண்டுத் திட்டத்தில், தமிழ்நாட்டில் ஸ்பூருட்டி திட்டத்தின் கீழ் 9 கயிறு குழுமங்கள் கோயம்புத்தூர், திண்டுக்கல், கன்னியாகுமரி, தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பூர், புதுக்கோட்டை, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் மொத்தம் ரூ.8.81 கோடி திட்ட



மதிப்பீட்டில் அமைக்க மத்திய அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது. இக்கயிறு குழுமங்களில் நார்கழிவு கட்டிகள் தயாரித்தல், ஊசிவலை மெத்தை தயாரித்தல், தானியங்கி இயந்திரம் மூலம் கயிறு திரித்தல் மற்றும் கயிறு ஜீயோ டெக்ஸ்டைல்ஸ் தயாரித்தல் போன்ற உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இக்குழுமங்களில் கண்டறியும் சோதனை அறிக்கை மைய அரசின் இறுதி ஒப்புதலுக்காக கயிறு வாரியத்தால் அனுப்பப்பட்டுள்ளது.

### 2.18.11 இதர தொழிற் கூட்டுறவு சங்கங்கள்

பாலிதீன் பை தயாரித்தல், செங்கல் உற்பத்தி செய்தல், ஆட்டோ சேவை, அச்சக உற்பத்தியாளர்கள் சேவை, ஒப்பந்தத் தொழிலாளர்கள், கைவினைத் தொழில், தையல் சேவை மற்றும் பொறியியல் ஆகிய முக்கியமான பிற பிரிவுகளிலும் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் இத்துறையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தொழிலாளர்கள் சுரண்டப்படுவதை தடுக்கவும், சட்டரீதியான பலன்களுடன் கூடிய தொடர் வேலைவாய்ப்பினை திறன் மற்றும் பகுதி திறன்பெற்ற தொழிலாளர்களுக்கு வழங்கும்

நோக்கத்துடன் ஒப்பந்த தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்புசாரா பிரிவுகளின் கீழ் அமைக்கப்பட்டுள்ளன. ஊரகப் பகுதியில் உள்ள ஆதி திராவிட இனத்தைச் சார்ந்த, வேலையில்லாத பெண்களுக்கு தொடர் வேலை வாய்ப்பினை வழங்கும் பொருட்டு பாலிதீன் பைகள் உற்பத்தி செய்யும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும், அனைத்துப்பிரிவிலும் உள்ள ஏழ்மையான ஆட்டோ ஓட்டுநர்களின் பொருளாதார நிலையினை உயர்த்தவும் மற்றும் மாதாந்திர தவணை திட்டத்தின் மூலம் அவர்களை ஆட்டோரிக்ஷா வாகனங்களின் உரிமையாளர்களாக உருவாக்குவதற்கும், ஆட்டோ ஓட்டுநர்கள் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. மாநிலத்தில் அமைப்பு சாரா பிரிவின் கீழ் உள்ள சிறு அச்சக அலகுகளின் துயர் துடைக்கும் பொருட்டும், அவர்களுக்கு தேவையான அச்சகப்பணி ஆணைகளை பெறவும், சிறு அச்சக அலகுகளை ஒன்றிணைத்து அச்சக தொழிற் கூட்டுறவு சேவை சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த ஏழ்மையான திறன்



தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கும் பொருட்டு, ஊரக பகுதிகளில் செங்கல் உற்பத்தி செய்யும் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தவிர, ஊரகக் கைவினைஞர்களுக்கு தேவையான வேலை வாய்ப்பினை வழங்கி, அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப்படுத்த கைவினைஞர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

மேலும், தொழில் முனைவோர்களுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் தொழிற் கூடங்களை வழங்கி, தொழில் தொடங்குவதற்கு ஏதுவாக கூட்டுறவு அமைப்பில் கூட்டுறவு தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன.

## 3. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)

### 3. 1 சிட்கோ – தொலைநோக்கு பார்வை மற்றும் குறிக்கோள்

மாநிலத்தில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு உதவுவதற்காகவும், அவற்றை மேம்படுத்துவதற்காகவும், தமிழ்நாடு அரசால் **1970–ல்** தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் **(சிட்கோ)** நிறுவப்பட்டது.

சிட்கோ நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள்

1. தொழிற்பேட்டைகளை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல்
2. மூலப்பொருட்கள் வழங்குதல்
3. சந்தை வசதிகள் ஏற்படுத்துதல்
4. தொழில் குழுமங்கள் மற்றும் பொது வசதி மையங்களை உருவாக்குதல்.
5. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு தேவையான தொழில்நுட்பம், சிறந்த செயல்பாடு, மூலதனம் மற்றும் சந்தை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.



சிட்கோ நிறுவப்பட்ட நாள் முதல் தனது தொலைநோக்கு பார்வையினை கருத்தில் கொண்டு அதன் இலக்கை அடைய அயராது செயல்பட்டு வருகிறது.

“குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் போட்டித் திறனை உயர்த்த அவற்றுடன் நிலையான ஒருங்கிணைப்பு”.

தற்போது சிட்கோ, அரசால் நிறுவப்பட்ட **35** தொழிற்பேட்டைகளையும், மற்றும் சிட்கோவால் உருவாக்கப்பட்ட **62** தொழிற்பேட்டைகளையும் பராமரித்து வருகிறது. (இணைப்பு – இ)

### 3.2 புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்குதல்

#### 3.2.1. நிலம் கண்டறிதல்

சிட்கோ நிறுவனம், குறிப்பிட்ட மாவட்டத்தில் கிளை அலுவலகத்தின் மூலம் புதிய தொழிற்பேட்டை துவங்குவதற்கான தேவை குறித்த ஆய்வினை மேற்கொள்கிறது. கிளை மேலாளரது அறிக்கை கிடைக்கப்பெற்ற உடன் சிட்கோவின் உயர் அலுவலர்கள் அடங்கிய குழு சம்மந்தப்பட்ட வருவாய் அலுவலர்களுடன், கண்டறியப்பட்ட நிலம் புதிய தொழிற்பேட்டை துவங்க

தகுதிவாய்ந்த நிலம்தானா என்பதை அறிய புலத்தணிக்கை மேற்கொள்வார்ளும். இது குறித்து திருப்தி அடைந்தவுடன் மேற்படி நிலங்களை சிட்கோவிற்கு நில உரிமை மாற்றம் / நில எடுப்பு செய்வதற்காக நில வரைபடம் மற்றும் திட்ட அட்டவணை ஆகியவை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்கப்படும்.

மாவட்ட ஆட்சியர், நில உரிமை மாற்ற முன்மொழிவுகளை நில நிர்வாக ஆணையர் மூலம் அரசுக்கு அனுப்புவார். தேர்வு செய்யப்பட்ட நிலங்கள் தனியார் பட்டா நிலமாக இருந்தால் நேரடி பேச்சு வார்த்தை மூலமாகவோ அல்லது தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம், 1997ன் கீழாகவோ நிலம் கையகப்படுத்துவதற்கான நிர்வாக அனுமதி பெற கருத்துரு அரசுக்கு அனுப்பப்படும்.

வருவாய் நிலை எண் 24ன் கீழ் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு அரசு புறம்போக்கு நிலங்களை சிட்கோ நிறுவனத்திற்கு உரிமை மாற்றம் செய்து அரசு ஆணை வெளியிடப்பட்டவுடன், சிட்கோ நில மதிப்பை செலுத்தி நிலங்களை கையகப்படுத்தும்.



தேர்வு செய்யப்பட்ட நிலங்கள் தனியார் பட்டா நிலங்களாக இருப்பின் அரசிடமிருந்து நிர்வாக அனுமதி பெற்ற உடன் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு நில எடுப்பு செய்ய நில உரிமையாளர்களிடம் நிலத்தின் மதிப்பு நிர்ணயம் செய்வது தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்தும். இக்குழு நிர்ணயம் செய்த நிலமதிப்பினை நில உரிமையாளர்கள் ஏற்றுக் கொள்ளாதபட்சத்தில் தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம், 1997ன் கீழ் நில எடுப்பு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்வார். மேற்படி நிலஎடுப்பு நடவடிக்கைகள் அனைத்தும் முடிவுற்ற பின் நிலங்களுக்கான சிட்கோ நில மதிப்பினை செலுத்தி நிலங்களை கையகப்படுத்தும்.

### 3.2.2 புதிய தொழிற் பேட்டைகளை உருவாக்குவதற்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களை மேம்படுத்துதல்

சிட்கோ நிறுவனத்தால் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டபின் அவ்விடங்களில் புதிய தொழிற்பேட்டைகள் அமைக்கப்படுகின்றன. இதற்கான மேம்பாட்டு பணிகள், சிட்கோ நிறுவனத்தின் சொந்த நிதியின் மூலமாகவோ அல்லது மைய அரசின் குறு, சிறு

நிறுவனங்கள் – குழும மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பெறப்படும் நிதியின் மூலமாகவோ மேற்கொள்ளப்படும்.

புதிய சாலைகள் அமைத்தல், மழைநீர் வடிகால் வசதி அமைத்தல், சிறு பாலங்கள், குடிநீர் வசதி ஏற்படுத்துதல், கழிவுநீர் வடிகால் வசதி ஏற்படுத்துதல், தெரு விளக்குகள் அமைத்தல், மரங்கள் நடுதல் மற்றும் தேவையான வசதிகளை உருவாக்குதல் போன்றவை மேம்பாட்டு பணிகளில் அடங்கும். மேலும் நகர் மற்றும் ஊரமைப்பு திட்ட இயக்குநரகம் / சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் விதிமுறைகளுக்கேற்றபடி தொழிற் பேட்டையின் வரைபடம் சிட்கோ கட்டுமானப் பிரிவால் தயாரிக்கப்பட்டு நகர் மற்றும் ஊரமைப்பு திட்ட இயக்குநரகம் / சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்படும். மேலும் தற்போது நடைமுறையில் உள்ள தொழிற்பேட்டைகளில் மேம்பாடு மற்றும் புதுப்பித்தல், உட்கட்டமைப்பு வசதிகளை வலுபடுத்தும் பணிகளையும் சிட்கோ செயல்படுத்தி வருகிறது.



### 3.2.3 தொழிற்பேட்டையில் தொழில் மனைகள் / தொழிற்கூடங்கள் ஒதுக்கீடு செய்தல்

காலியாக உள்ள தொழில் மனைகள் மற்றும் தொழிற்கூடங்கள் குறித்து செய்தித்தாள்களில் விளம்பரப்படுத்தப்பட்டு, ஒதுக்கீடுகளில் வெளிப்படையான நடைமுறை பின்பற்றப்படுகிறது. தகுதியான விண்ணப்பதாரர்கள், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், தொழில் வணிகத் துறை ஆணையரகம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆகியவற்றின் அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு குறு மற்றும் சிறு தொழில்கள் சங்கத்தின் (டான்ஸ்டியா) பிரதிநிதி ஆகியோர் அடங்கிய தேர்வுக் குழுவால் நேர்காணல் செய்யப்பட்டு, தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். குலுக்கல் முறையில் தொழில் மனைகள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

சிட்கோ நிறுவனம், தொழிற்பேட்டைகளில் உள்ள தொழில் நிறுவனங்களின் தேவைக்கு ஏற்ப 5 சென்ட் முதல் 100 சென்ட் (1 ஏக்கர்) மற்றும் அதற்கு மேலான

அளவுள்ள தொழில்மனைகளை ‘‘முழு கிரைய விலை விற்பனை’’ மூலம் மட்டும் நடைமுறையில் உள்ள தொழிற்பேட்டைகளில் ஒதுக்கீடு செய்கிறது. 2013–14ஆம் ஆண்டில் 335 தொழில்மனைகள் மற்றும் 11 தொழிற்கூடங்கள் புதிய தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன.

### 3.3 சிட்கோவின் புதிய ஒதுக்கீட்டு கொள்கை

சிட்கோ நிறுவனம் அதன் தொழிற்பேட்டைகளில், முழு கிரைய விலை விற்பனை மூலம் ஒதுக்கீடுகள் செய்து வருகிறது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை ஊக்குவிக்க புதிய ஒதுக்கீட்டு கொள்கை 18.11.2013ஆம் நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அரசாணை (நிலை) எண் 66இல் வெளியிட்டுள்ள 2013–14 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்படும் புதிய தொழிற்பேட்டைகளில் இம்முறை நடைமுறைப்படுத்தப் படுகிறது. இக்கொள்கையின்படி, 30 ஆண்டு கால குத்தகை அடிப்படையில் மனைகள் / தொழிற்கூடங்கள் ஒதுக்கீடு செய்யவும், 30 ஆண்டு கால முடிவில், தொழில்



முனைவோருக்கு முழு கிரய விலையில் வாங்கவும் விருப்புரிமை அளிக்கப்படும்.

### 3.4 பல்வேறு பிரிவினருக்கு தொழில் மனைகள் / தொழிற்கூடங்கள் ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளித்தல்

31.01.2009 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை (நிலை) எண்.7இன்படி புதிதாக உருவாக்கப்படும் தொழிற்பேட்டையில் விற்பனைக்கு உள்ள மொத்த நிலப் பகுதியில் 30% குறுந்தொழில்களுக்காக ஒதுக்கப்படுகிறது.

கீழ்கண்ட பிரிவினருக்கு ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

1. மகளிர் தொழில் முனைவோர் –30%
2. முன்னாள் இராணுவத்தினர் –10%
3. பட்டியல் இனத்தினர் / பழங்குடியினர் மற்றும் திருநங்கையர் –10%

மேற்படி இனங்களில் போதுமான விண்ணப்பங்கள் பெறப்படாத பட்சத்தில் அவர்களுக்காக

ஒதுக்கப்பட்டிருந்த தொழில்மனைகள் மற்றும் தொழிற்கூடங்கள் மற்ற பிரிவினருக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

**29.10.2012** நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை (நிலை) எண். 49 இன்படி, புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (NEEDS), தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி (EDP) பெற்ற முதல் தலைமுறை தொழில் முனைவோர்கள் விண்ணப்பித்தால், சிட்கோ தொழில் மனைகள் / தொழிற்கூடங்கள் காலியாக இருக்கும் பட்சத்தில் முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

### 3.5 புதியதாக அமைக்கப்பட உள்ள தொழிற்பேட்டைகளின் நிலவரம்

**2011–2014** வருடங்களில் 22 இடங்களில் புதிதாக தொழிற்பேட்டை அமைக்கப்படும் என்ற அறிவிப்பின் படி ராசாத்தவலசு (திருப்பூர் மாவட்டம்), மாத்தூர் (புதுகோட்டை மாவட்டம்), வாணியம்பாடி (வேலூர் மாவட்டம்), விருதுநகர் நகர்புறம் (விருதுநகர் மாவட்டம்), வெண்மணியாத்தூர் (விழுப்புரம் மாவட்டம்) ஆகிய 5



இடங்களில் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டு விட்டன. மீதமுள்ள 17 தொழிற்பேட்டைகளின் திட்ட பணிகள் குறித்த விவரம் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது:–

| வ. எண் | அமைவிடம் | மாவட்டம் | பரப்பளவு (ஏக்கரில்) | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| 1 | காட்டுவன்னஞ்சூர் | விழுப்புரம் | 42.00 | மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 2 | வேட்டம்பாடி | நாமக்கல் | 15.33 | மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 3 | மல்லூர் | அரியலூர் | 29.00 | மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 4 | பருவதனஹல்லி | தருமபுரி | 29.90 | மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 5 | பட்டணம் | விழுப்புரம் | 60.55 | மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 6 | குருக்கள்பட்டி | திருநெல்வேலி | 68.77 | நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. வரைபட ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. |
| 7 | பிடாநேரி | தூத்துக்குடி | 108.23 | மத்திய அரசின் ஒப்புதல் ஆணை எதிர்பார்க்கப்படுகிறது. |
| 8 | பாளையபட்டி | தஞ்சாவூர் | 103.03 | மத்திய அரசிடமிருந்து ஆணை பெறப்பட்டு முதற்கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | மரிக்குண்டு | தேனி | 79.43 | மத்திய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு, ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. |
| 10 | ஏ. சாத்தனூர் | விழுப்புரம் | 219.52 | நில உரிமை மாற்ற ஆணை எதிர்பார்க்கப்படுகிறது. |
| 11 | பொன்னாகுடி | திருநெல்வேலி | 82.18 | நில உரிமை மாற்ற ஆணை வெளியிடப்பட்டுள்ளது. திருத்திய நில மதிப்பு நிர்ணயம் செய்தவுடன் நிலம் கையகப்படுத்தப்படும். |
| 12 | ஆசனூர் (பகுதி–II) | விழுப்புரம் | 105.50 | நிலம் கையகப்படுத்தப்பட்டு வரைபடம் தயாரிப்பில் உள்ளது. |
| 13 | செங்கரை | திருவள்ளூர் | 36.53 | நிலம் கையகப்படுத்தப்பட்டு வரைபடம் தயாரிப்பில் உள்ளது. |
| 14 | ஈச்சம்பாடி | தருமபுரி | 51.20 | வரைபடம் தயாரிப்பில் உள்ளது. |
| 15 | பெரியநெசலூர் | கடலூர் | 90.68 | குறு,சிறு தொழில் நிறுவனங்கள் – குழும வளர்ச்சி திட்டம் மூலம் நிதி உதவி பெற கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பட உள்ளது. |
| 16 | சக்கரக்கோட்டை | இராமநாதபுரம் | 100.00 | நில உரிமை மாற்ற ஆணை எதிர்பார்க்கப்படுகிறது. |



| | | | | |
|---|---|---|---|---|
| 17 | மின்னூர் | வேலூர் | 10.00 | வரைபட ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. |
| | **மொத்தம்** | | **1231.85** | |

எதிர்வரும் காலங்களில் மேற்கூறிய இடங்களைத் தவிர மொத்தம் **956.00** ஏக்கர் நிலப்பரப்பில் **16** இடங்களில், புதிய தொழிற்பேட்டைகளை தொடங்கும் பொருட்டு நில வங்கிகள் உருவாக்க நிலங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

## 3.6 மகளிர் தொழிற்பேட்டைகள்

மகளிர் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் பொருட்டு, கடந்த **2001** ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மகளிர் அதிகாரம் பெற அறிவிக்கப்பட்ட முக்கியத் திட்டங்களில் ஒன்றாக, **5** இடங்களில் மகளிருக்கென தொழிற்பேட்டைகள் துவங்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி கீழ்க்கண்ட **5** இடங்களில் மகளிர் தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டன.

| வ. எண் | தொழிற்பேட்டையின் பெயர் | தொடங்கப் பட்ட ஆண்டு | ஏக்கர் (பரப்பளவில்) | மேம்படுத்தப் பட்ட தொழில் மனைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | திருமுல்லைவாயில், திருவள்ளூர் மாவட்டம் | 2001 | 225.80 | 785 |
| 2 | திருமுடிவாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம் | 2002 | 10.75 | 76 |
| 3 | வாழவந்தான்கோட்டை, திருச்சி மாவட்டம் | 2003 | 51.70 | 110 |
| 4 | கருப்பூர், சேலம் மாவட்டம் | 2004 | 51.74 | 154 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | கப்பலூர், மதுரை மாவட்டம் | 2008 | 18.45 | 70 |
| | **மொத்தம்** | | **358.44** | **1195** |

### 3.7 புதிய மற்றும் நடைமுறையில் உள்ள தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்

தொழில் உட்கட்டமைப்புகளும் மற்றும் அத்தியாவாசிய பயன்பாட்டு அமைவுகளும் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு அதி முக்கிய அவசியம். பொதுவான அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, தெருவிளக்கு, சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதி போன்றவை தவிர குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான மேலும் சில கட்டமைப்பு வசதிகளான கழிவு நீர் சுத்திகரிப்பு, பரிசோதனை மற்றும் ஆய்வுக்கூட வசதிகள் போன்றவற்றை குழும அடிப்படையில் அமைத்திட வேண்டும்.

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களை மேலும் உத்வேகமிக்கதாக ஆக்க ஒரு முக்கிய உத்தியாக குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கென துவக்கப்படும் தொழிற்பேட்டைகளில் போதுமான பொது வசதிகள் மற்றும் பயன்பாட்டு அமைப்புகள் ஏற்படுத்தப்படுவதை சிட்கோ



உறுதி செய்ய வேண்டும் என தமிழ்நாடு தொலைநோக்கு திட்டம் 2023இல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மைய, மாநில அரசுகள் புதிய தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திடவும், நடைமுறையில் உள்ள தொழிற்பேட்டைகளில் வசதிகளை மேம்படுத்திடவும் குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும மேம்பாட்டுத் திட்டம் (உட்கட்டமைப்பு மேம்பாடு–MSE-CDP) திருத்தியமைக்கப்பட்ட தொழில் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (MIIUS), ஏற்றுமதி மற்றும் அதைச் சார்ந்த செயல்பாடுகளுக்கான மாநிலங்களுக்கு உதவும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (ASIDE) மற்றும் தமிழ்நாடு அரசின் பகுதி–II திட்டம் ஆகிய திட்டங்களின் வாயிலாக மானியம் வழங்கி ஆதரவளிக்கின்றன.

### 3.8 குறு,சிறு தொழில் நிறுவனங்கள்– குழும மேம்பாட்டுத் திட்டம் (MSE-CDP)

இத்திட்டத்திற்கென, மைய அரசிடமிருந்து கீழ்கண்டவாறு நிதி உதவிகள் பெறப்படுகின்றன.

❖ குறு,சிறு தொழில் நிறுவனங்கள் – குழும மேம்பாட்டுத் திட்டம் (உட்கட்டமைப்பு மேம்பாடு)

❖ குறு,சிறு தொழில் நிறுவனங்கள் – குழும மேம்பாட்டுத் திட்டம் (பொது வசதி மையம்)

### 3.8.1 குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும மேம்பாட்டுத் திட்டத்தின் (MSE-CDP) கீழ் உட்கட்டமைப்பு மேம்பாடு

புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்குதல் மற்றும் நடைமுறையில் உள்ள தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்புகளைமேம்படுத்துவதற்காக,இத்திட்டத்தின் கீழ் மைய அரசு மொத்த திட்ட மதிப்பீட்டில் 60% ரூ. 6 கோடி உச்ச வரம்புக்கு உட்பட்டு மானியமாக வழங்குகிறது (அதிகபட்ச திட்ட மதிப்பீடு ரூ. 10 கோடி). 2011–12–ஆம் ஆண்டு வரை, இத்திட்டத்தின் கீழ், மைய அரசு ரூ. 40.74 கோடி திட்ட மதிப்பீட்டில் 12 புதிய தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ஒப்புதல் அளித்தது. இவ் ஒப்புதலளிக்கப்பட்ட திட்டங்களில், உறங்கான்பட்டி, திருமுடிவாக்கம், திருமுல்லைவாயில், விச்சூர், வாழவந்தான்கோட்டை, கருப்பூர், எலம்பலூர், கடகத்தூர், ஆசனூர் (பகுதி–I)



மற்றும் அரக்கோணம் ஆகிய 10 தொழிற்பேட்டைகளில் திட்டப் பணிகள் முடிவடைந்துள்ளன.

மீதமுள்ள போலுப்பள்ளி மற்றும் காரைக்குடி ஆகிய இரண்டு தொழிற்பேட்டைகளில் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

மேலும், ரூ.23.90 கோடி திட்ட மதிப்பீட்டில் நடைமுறையில் உள்ள 12 தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டுக்காக மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த 12 தொழிற்பேட்டைகளில் ஓசூர், குறிச்சி, கப்பலூர், விருதுநகர், முகுந்தராயபுரம், ஊட்டி, கணபதிபாளையம், காக்களூர், மேட்டூர், ஆலத்தூர் மற்றும் கோவில்பட்டி ஆகிய 11 தொழிற்பேட்டைகளில் மேம்பாட்டுப்பணிகள் முடிவடைந்து விட்டன. ஆத்தூரில் (கரூர்) பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

2012 முதல் 2014 வரை ரூ. 13.09 கோடி திட்ட மதிப்பீட்டில் வாணியம்பாடி, மாத்தூர் (புதிய), விருதுநகர் (நகர்புறம்) மற்றும் பாளையபட்டி ஆகிய நான்கு தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளை சிட்கோ மேற்கொண்டது. மேலும்

நடைமுறையில் உள்ள மலுமிச்சம்பட்டியில் உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்கூறியவற்றில் மாத்தூர் (புதிய), விருதுநகர் (நகர்புறம்) மற்றும் வாணியம்பாடி ஆகிய மூன்று இடங்களில் மேம்பாட்டு பணிகள் முடிவடைந்துவிட்டன. மேலும், ரூ.19.10 கோடி திட்ட மதிப்பீட்டில் பட்டணம், காட்டுவனஞ்சூர், பர்வதனஹல்லி, மல்லூர் மற்றும் வேட்டம்பாடி ஆகிய 5 புதிய தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகள் சிட்கோவின் சொந்த நிதியில் நடைபெற்று வருகின்றன.

2014–15 ஆம் ஆண்டில் இத் திட்டத்தின் கீழ் சிட்கோ 5 புதிய தொழிற்பேடைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும் மற்றும் நடைமுறையில் உள்ள ஒரு தொழிற்பேட்டையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் உத்தேசித்துள்ளது. அவை பின்வருமாறு:



**புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்குதல் (2014–15)**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | அமைவிடம் | திட்ட மதிப்பு | மைய அரசின் மானியம் | சிட்கோவின் பங்கு |
|---|---|---|---|---|
| 1 | பிடாநேரி, தூத்துக்குடி மாவட்டம் | 447.95 | 268.77 | 179.18 |
| 2 | மரிக்குண்டு, தேனி மாவட்டம் | 850.00 | 398.00 | 452.00 |
| 3 | குருக்கள்பட்டி, திருநெல்வேலி மாவட்டம் | 890.00 | 534.00 | 356.00 |
| 4 | பெரியநெசலூர், கடலூர் மாவட்டம் | 1250.00 | 519.00 | 731.00 |
| 5 | ஈச்சம்பாடி, தர்மபுரி மாவட்டம் | 550.00 | 330.00 | 220.00 |
| | **மொத்தம்** | **3987.95** | **2049.77** | **1938.18** |

மேலும், சிட்கோவின் சொந்த நிதியிலிருந்து ரூ.5.85 கோடி திட்ட மதிப்பில் ஆசனூர் (பகுதி II) விழுப்புரம் மாவட்டத்தில் உருவாக்கப்பட உள்ள புதிய தொழிற்பேட்டையில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

## நடைமுறையில் உள்ள தொழிற்பேட்டைகளை மேம்படுத்துதல்

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எண் | தொழிற் பேட்டையின் பெயர் | திட்ட மதிப்பு | மைய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | பயனாளிகளின் பங்களிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | திருவெறும்பூர், திருச்சி மாவட்டம் | 432.00 | 259.20 | 129.60 | 43.20 |

மேற்கூறப்பட்டவை தவிர சிட்கோவின் சொந்த நிதியிலிருந்து ரூ.12 கோடி திட்ட மதிப்பீட்டில் செங்கரை (திருவள்ளூர் மாவட்டம்) மற்றும் பொன்னாகுடி (திருநெல்வேலி மாவட்டம்) ஆகிய இடங்களில் உட்கட்டமைபு வசதிகள் சிட்கோவால் உருவாக்கப்படும்.

### 3.8.2 குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும மேம்பாட்டுத் திட்டத்தின் [ MSE-CDP] கீழ் பொது வசதி மையம் அமைத்தல்

குறு, சிறுதொழில் நிறுவனங்கள் – குழும மேம்பாட்டுத் திட்டம் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் ஆதாரங்கள் மற்றும் நிதி பெறுதல் தலமாக்கவும் சந்தையில் போட்டியிடும் திறனை அதிகரிப்பதற்காகவும் வரையறுக்கப்பட்ட பூகோள பரப்பில்



குழுமங்களை உருவாக்கி தொழில்களின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதை நோக்கமாகக் கொண்டது. ஒரு குழுமம் என்பது குறிப்பிட்ட பூகோள பரப்பில் அமைந்த ஒரே மாதிரியான மற்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய தொழில் நிறுவனங்களின் தொகுப்பாகும். அவை பொதுவான சந்தை, தொழில் நுட்பங்கள், தொழிலாளர் திறன் தேவைகளை பகிர்ந்து கொள்வதாகவும் ஒரே மாதிரியான பொருட்களை தயாரிப்பதாகவும் அமையும். குழுமங்களின் முக்கிய குணாதிசயங்கள் பின் வருமாறு:

(அ) தயாரிப்பு முறை, தரக்கட்டுப்பாடு, பரிசோதனை, சக்தியை பயன்படுத்துதல், மாசுக் கட்டுப்பாடு ஆகியவை ஒரே மாதிரியாக இருத்தல்.

(ஆ) ஒரே மாதிரியான தொழில் நுட்பம் மற்றும் விற்பனை அணுகுமுறைகள்

(இ) குழும உறுப்பினர்களுடன் எளிமையான தொடர்பு முறைகள்

(ஈ) சவால்கள் மற்றும் வாய்ப்புகள் பொதுவானவையாக இருத்தல்

குறு, மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்–கிடையே போட்டித்திறனை அதிகரிக்கவும் மற்றும் உற்பத்தியை பெருக்குவதற்கான முக்கிய உத்தியாக

குழும வளர்ச்சியை மத்திய மற்றும் மாநில அரசுகள் மேற்கொண்டுள்ளது. தொழிலகங்களை குழுமங்களாக ஆக்குவதன் மூலம் பலதரப்பட்ட சேவைகளான வங்கி மற்றும் நிதி உதவி நிறுவனங்களின் சேவைகளை குறைந்த செலவில் பெறுவதன் மூலம் இச்சேவைகள் இக்குழுமங்களுக்கு சிக்கனமான வழியில் கிடைத்திடவும் அவை அதிக அளவில் கிடைத்திடவும் வழிவகை செய்யப்படுகிறது.

பொதுவான பிரச்சனைகளை அணுகுதல், சுயஉதவிக் குழு, கூட்டமைப்பு முதலியவற்றை ஏற்படுத்தி பொதுவான ஆதரவு நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக அவைகளின் திறன் வளர்த்ததல் ஆகியவை மூலம் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் நிலைத்த தன்மை மற்றும் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கெனவும் பொது வசதி மையம் (பரிசோதனை மையம், பயிற்சி மையம், மூலப் பொருட்கள் கிடங்கு, கழிவு நீர் சுத்திகரிப்பு, உற்பத்தி முறையை பூர்த்திசெய்தல்) ஏற்படுத்துவதற்கெனவும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.



குறு, சிறு தொழில் நிறுவனங்களின் குழும வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பொது வசதி மையம் அமைப்பது தொடர்பான நிதி ஆதாரம் கீழ்வருமாறு:

| | |
|---|---|
| மைய அரசு மானியம் | 70%<br>(அதிகபட்சம் ரூ.15கோடி) |
| மாநில அரசு மானியம் | 10%<br>(அதிகபட்ச மானியம் ரூ.1கோடி) |
| சிறப்பு நோக்க ஊர்தி பங்களிப்பு/ வங்கிக் கடன் | 20% |

குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும மேம்பாட்டுத்திட்டத்தின் [MSE-CDP] கீழ் மாநிலத்தில் அமைக்கப்பட்டு வரும் பொது வசதி மையங்களை செயல்படுத்தும் முகமை நிறுவனமாக சிட்கோ நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் இத்திட்டத்தினை செயல்படுத்த மொத்தம் 53 குழுமங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றுள் 29 குழுமங்களுக்கு மொத்த திட்ட மதிப்பீடு ரூ. 152.83 கோடியில் ரூ. 104.46 கோடி மானியமாக மைய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மாநில அரசு ரூ. 11.50 கோடி மானியம் அளித்துள்ளது. மேற்கூறிய 29 திட்டங்களில் 7 திட்டங்கள் ஏற்கனவே முடிவடைந்துவிட்டன. மீதமுள்ள 22 பொது வசதி மையத் திட்டங்கள் பல்வேறு நிலைகளில்

செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இக்குழுமங்களின் மூலமாக எதிர்பார்க்கப்படும் வேலைவாய்ப்பு சுமார் 25,000 நபர்கள் ஆகும்.

குந்தா தொழில் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையின் பொன் விழா கொண்டாட்டத்தின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ரூ 15 கோடி திட்ட மதிப்பீட்டில் நீலகிரி மாவட்ட தேயிலை தொழிலை ஊக்குவிக்க கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையத்தில், ஒரு பொது வசதி மையத்துடன் கூடிய தேயிலைக் குழுமம் (Tea Cluster) உருவாக்கப்படும் என்று அறிவித்தார்கள். தேயிலைத்தூள் கலத்தல், தேயிலைத்தூளை பொதிவு செய்தல் (Packing), சேமிப்புக் கிடங்கு, ஆய்வகம் மற்றும் விற்பனை மையம் ஆகியவற்றை கொண்டதாக இந்த பொது வசதி மையம் இருக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 4.1.2014 அன்று இதற்கான அடிக்கல்லை நாட்டினார்கள். அசைடு (ASIDE) திட்டத்தின் கீழ் இப்பொது வசதி மையத்திற்கான நிதி உதவி பெற நடவடிக்கை எடுக்கப்படுகிறது.



மாநிலத்தில் குறு,சிறு தொழில் நிறுவனங்கள் குழும மேம்பாட்டுத் திட்டத்தின் (பொது வசதி மையம்) செயல்பாட்டின் விபரம் கீழ் கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| அ. | மைய அரசிடமிருந்து இறுதி ஒப்புதல் பெறப்பட்ட திட்டங்கள் (இணைப்பு – ஈ) | 29 |
| ஆ. | மைய அரசினால் கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப் பட்ட திட்டங்கள் (இணைப்பு–உ) | 04 |
| இ. | மைய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டு / செய்யப்படபல்வேறு நிலையில் உள்ள திட்டங்கள் (இணைப்பு–ஊ, எ, ஏ, ஐ,ஒ,ஓ) | 20 |

## 3.9 மூலப்பொருட்கள் விநியோகம்

மூலப்பொருட்களாகிய இரும்பு மற்றும் எஃகு, பாரபின் மெழுகு, பொட்டாசியம் குளோரேட் மற்றும் தமிழ்நாடு காகிதத்தாள் நிறுவனத்தின் காகிதம் ஆகியவற்றை அம்பத்தூர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சாத்தூர் மற்றும் சிவகாசி ஆகிய இடங்களில் உள்ள மூலப்பொருள் கிடங்குகளின் வழியாகவும், ஈரோடு, சேலம், தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகிய கிளை அலுவலகங்களின் வழியாகவும் சிட்கோ நிறுவனம் விநியோகம் செய்து வருகின்றது.

2013–14 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு, எட்டிய சாதனை, ஆகியவை பின்வருமாறு:

| வ. எண் | மூலப் பொருள் | இலக்கு | | சாதனை (மார்ச்–2014 வரை) | |
|---|---|---|---|---|---|
| | | அளவு (மெ.டன்) | மதிப்பு ரூ.(இலட்சத்தில்) | அளவு (மெ.டன்) | மதிப்பு ரூ. (இலட்சத்தில்) |
| 1 | இரும்பு மற்றும் எஃகு | 4700.00 | 2238.00 | 1813.56 | 929.64 |
| 2 | பாரபின்மெழுகு | 5400.00 | 5443.00 | 3349.90 | 3310.23 |
| 3 | காகிதம் (நேரடி விற்பனை) | 300.00 | 180.00 | 177.61 | 120.89 |
| 4 | காகிதம் (முகவாண்மை விற்பனை) | 1000.00 | 600.00 | 822.56 | 525.60 |
| 5 | பொட்டா சியம் குளோரேட் | 5.00 | 4.80 | 0.00 | 0.00 |
| மொத்தம் | | 11405.00 | 8465.80 | 6163.64 | 4886.36 |

### 3.10 விற்பனை உதவித் திட்டம்

விற்பனை திட்டத்தின் கீழ், குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு சிட்கோ உதவி செய்கிறது. இத் திட்டத்தின் கீழ் சிட்கோவிடம் பதிவு செய்த குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் சார்பாக சிட்கோ மாநில அரசுத் துறைகள்/நிறுவனங்களை அணுகி வழங்கல் ஆணைகளை பெற்று உதவுகிறது. சிட்கோ நிறுவனத்தால் பெறப்பட்ட வழங்கல் ஆணைகள், குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் இடையே



பகிர்ந்தளிக்கப்படுகின்றன. தரமான பொருட்கள் சரியான நேரத்தில் வழங்கப்படுவதை சிட்கோ நிறுவனம் உறுதி செய்கிறது. வழங்கப்பட்ட பொருட்களுக்கு அரசுத் துறைகள் / பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் தொகையில் 3% ஆலோசனைக் கட்டணமாக பிடித்தம் செய்த பின்னர் சிறு தொழில் நிறுவனங்களுக்கு பொருட்களுக்கு உண்டான தொகை வழங்கப்படுகிறது.

சிட்கோ நிறுவனம் 2013–2014ஆம் ஆண்டில் ரூ.2.47 கோடி மதிப்பிலான வழங்கல் ஆணைகளைப் பெற்று நிறைவேற்றி இருக்கிறது.

### 3.11 மின் ஆளுமை

சிட்கோ நிறுவனத்தின் செயல்பாடுகளை மறு சீரமைக்கும் குறிக்கோளுடன் அலுவலக நடைமுறைகளை எளிமையாக்கி இந்நிறுவனத்தின் செயல்பாடுகளை விரைவுபடுத்தும் பொருட்டும் இந்நிறுவனம் அதனுடைய அனைத்துப் பணிகளையும் கணினிமயமாக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் வேலைத் திறனை அதிகரிக்கவும் திறம்பட செயலாற்றவும் இயலும். முதற்கட்டமாக தொழில் மனைகள் ஒதுக்கீட்டிற்கான

விண்ணப்பப் படிவங்களை சிட்கோ நிறுவனத்தின் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் (download) செய்துகொள்ளும் வசதியை இந்நிறுவனம் அறிமுகப்படுத்தி உள்ளது. எல்காட் நிறுவனத்தின் உதவியுடன், இந்நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் இணையதளத்தின் மூலம் செயல்படுத்த புதிய மென் பொருள் உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாநிலத்தில் சிட்கோவால் பராமரிக்கப்படும் அனைத்து தொழிற்பேட்டைகள் குறித்த முக்கிய விவரங்களைான வரைபடம் தொழில்கூடம் / மனை, ஒதுக்கீட்டு விவரங்கள் தொழிலகங்களின் தொழில் நடவடிக்கைகள், உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்பு, உற்பத்திப்பொருட்கள் / சேவைகள் சந்தை வசதி மற்றும் மூலப்பொருட்கள் அடங்கிய GIS தகவல் தொகுப்பு ஒன்றை உருவாக்கும் பணி திருவாளர்கள் எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள நபர்கள் இலவசமாக அணுகிப்பெற சிட்கோவின் அதிகார பூர்வ வலைதளத்தில் இவ்விவரங்கள் பதிவேற்றம் செய்யப்படும்.



# 4. தமிழ் நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி)

## 4.1 உருவாக்கம்

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) 1965ஆம் வருடத்திற்கு முன்னதாக தொழில் மற்றும் வணிகத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்த 64 சிறுதொழில் கூடங்களை ஏற்றுக்கொண்டு ஒரு கம்பெனியாக உருவாக்கப்பட்டது. 1.12.1965 முதல் உற்பத்தியை தொடங்கியது.

தனியார் தொழில் முனைவோரின் வளர்ச்சியின் காரணமாக டான்சியின் சில தொழிற்கூடங்களில் காலத்திற்கேற்றாற்போல் அமையாமலும் நிலைத்தன்மை இல்லாமலும் ஆன காரணத்தால் டான்சி படிப்படியாக அத்தொழிற்கூடங்களின் செயல்பாடுகளை நிறுத்தியது. தற்போது டான்சியில் 26 தொழிற்கூடங்களும், (அரைக்கலன் தயாரிக்கும் தொழிற்கூடங்கள் – 13, கட்டுமானம் மற்றும் பொறியியல் தொழிற்கூடங்கள்– 10, சிறப்புவகை தொழிற்கூடங்கள் – 3) சென்னை, நாமக்கல் மற்றும் திருச்சியில் 3 காட்சியகங்களும் உள்ளன.

## 4.2 முக்கிய நடவடிக்கைகள்

மரம் மற்றும் எஃகினாலான அறைகலன்கள், பிற கட்டுமான வேலைகள், மற்றும் கைப்பம்புகள் உற்பத்தி செய்தல், சாராவியை அடிப்படையாகக் கொண்ட சர்ஜிகல் ஸ்பிரிட், வர்ணம் போன்ற பொருட்களையும் உள்வேலைப்பாடுகள், மின்வாரியத்திதிற்கு மின்கடத்தி பொருட்கள் தயாரித்தல் குழந்தைகள் எடைபோடும் சாதனம் முதலியவற்றை டான்சி உற்பத்தி செய்து வருகிறது. ஆழ் துளை கிணற்றுக்கான கைப்பம்புகள், தரமிக்க மரம் மற்றும் எஃகினாலான அறைகலன்கள், சாராவியைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் சர்ஜிகல் ஸ்பிரிட் மற்றும் வர்ணம் போன்ற பொருட்களை உற்பத்தி செய்வதில் டான்சி தனி முத்திரையை பதித்து தனித்தன்மை பெற்றுள்ளது. மேலும், ‘சர்வசிக்சா அபியான்’ திட்டத்தின்கீழ் பள்ளிகளுக்குத் தேவையான பலவகைப்பட்ட அறைகலன்களையும், அரசு மாணவ/மாணவியர் விடுதிகளுக்கான ஸ்டீல் கட்டில்கள் மற்றும் குடிநீர் வழங்க தேவையான கைப்பம்புகளையும், கைப்பம்புகளுக்குத் தேவையான உதிரி பாகங்களையும் வழங்கி வருகிறது.



டான்சியின் இரு கைப்பம்பு தொழிற்சாலைகளாகிய டான்சி கைப்பம்பு தொழிற்சாலை, அம்பத்தூர் / டான்சி கருவி மற்றும் பொறியியல் தொழிற்சாலை, திருச்சி, பழனி, இராஜபாளையம் மற்றும் வேலூர் ஆகிய 3 இடங்களில் உள்ள டான்சி பேப்ரிகேஷன் தொழிற்சாலைகள் மற்றும் தமிழ்நாடு வர்ணம் மற்றும் வர்ணம் சார்ந்த பொருட்கள் லிமிடெட் (TAPAP) ஐ.எஸ்.ஓ 9001:2008 சான்றிதழ் பெற்றுள்ளது ஒரு பெருமைப்படத்தக்கதாகும்.

## 4.3 செயல்பாடுகள்

**2013–14ஆம் ஆண்டிற்கான செயல்பாடு (மார்ச் 2014 வரை)**

(ரூ. கோடியில்)

| | 2013–14 | | 2014–15 |
|---|---|---|---|
| | இலக்கு 2013–14 | செயல்பாடு 2013–14 | இலக்கு 2014–15 |
| உற்பத்தி | 100.00 | 97.02 | 110.00 |
| விற்பனை | 100.00 | 99.33 | 110.00 |
| வரிக்கு முன் இலாபம் | 7.18 | 17.80 | 19.20 |
| வருமான வரி ஒதுக்கீடு | 2.39 | 6.03 | 6.51 |
| நிகர இலாபம் (தோராயமாக) | 4.79 | 11.77 | 12.69 |

## 4.4 டான்சியின் தொழிற்கூடங்களின் வகைகள் மற்றும் உற்பத்தி பொருட்கள் விபரங்கள்

| தொழிற்கூட வகைகள் | உற்பத்தி பொருட்கள் |
|---|---|
| (i) கட்டுமானம் மற்றும் பொறியியல் | தொழிற்சாலைகள், பேருந்து நிறுத்தங்கள் போன்றவற்றிற்கு தேவைப்படும் மென் கட்டுமானங்கள்; கதவு மற்றும் ஜன்னல்கள், மின் கடத்தி பொருட்கள், நிலைப்பெட்டிகள், உலோகத் தகடுகளாலான பொருட்கள். |
| (ii) அறைகலன்கள் | மர அறைகலன்கள், உள் அலங்கார வேலைப்பாடுகள், மற்றும் தடுப்புகள் |
| (iii) சிறப்பு வகைத் தயாரிப்புகள் | ஆழ்துளை கிணறுக்கான கைப்பம்புகள், பம்புகளின் உதிரி பாகங்கள், ஸ்பிரிட்டை மூலப் பொருளாகக் கொண்ட மருத்துவ பொருட்களான சர்ஜிகல் ஸ்பிரிட், டி–நேச்சர்ட் ஸ்பிரிட், டின்சர் செட்ரிமைடு, பொவிடோன் அயோடின், ஸ்பிரிட்டை அடிப்படையாகக் கொண்ட தொழில் பொருட்களான காஸ்கெட் ஷெல்லாக், பிரென்ச் பாலிஷ், தின்னர் மற்றும் கிருமி நாசிகளான லைசால் மற்றும் பெனாயில் . |



## 4.5 அரசுக்குச் செலுத்தப்பட்ட நியமனக் கட்டணம்

அரசு மற்றும் பல்வேறு அரசுத் துறைகள் / முகமைகள் குறிப்பாக பள்ளிக் கல்வித் துறை, உயர்கல்வித் துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம், தமிழ்நாடு மின் வாரியம் கால்நடை பராமரிப்பு மற்றும் நிதித்துறை ஆகியவற்றின் ஆதரவினால் டான்சி தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. அரசு நேரிடையாக பணி ஆணைகளை டான்சிக்கு வழங்கும் வகையில் சலுகைகள் அளித்ததால், டான்சியின் செயல்பாடுகள் அதிகரித்து கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் ரூ.75.35 கோடி நியமனக் கட்டணமாகச் செலுத்தியுள்ளது.

## 4.6 நிறைவேற்றப்பட்ட முக்கிய பணிகள்

டான்சி, அரசின் உதவியுடன் உயர் கல்வித் துறைக்கு மர அறைகலன்களை ரூ.44.50 கோடிக்கு வழங்கியுள்ளது. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின்கீழ் மழலையர் எடை பார்க்கும் கருவி ரூ.7.83 கோடிக்கும், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின்கடத்தி பொருட்கள் ரூ.10 கோடிக்கு வழங்கியுள்ளது. மேலும்,

2013–14ல் பல்வேறு அரசு துறைகளுக்கு ரூ.23 கோடிக்கு பொருட்களை வழங்கியுள்ளது.

### 4.7 தமிழ்நாடு வர்ணம் மற்றும் உபபொருட்கள் நிறுவனம் (டாபப்) (டான்சியின் துணை நிறுவனம்)

இந்நிறுவனம் டான்சியின் முழு ஆளுமைப் பெற்ற துணை நிறுவனமாக வர்ணங்கள் மற்றும் வர்ணம் சார்ந்த பொருட்களை தயாரித்து வழங்க துவக்கப்பட்டது. டாபப் 18.11.1985 முதல் அம்பத்தூரில் பதிவுபெற்ற தலைமையிடத்தைக் கொண்டு உற்பத்தியை ஆரம்பித்தது. இதன் முக்கிய பணியானது பல்வேறு அரசு துறைகள், போக்குவரத்து கழகங்கள் மற்றும் மாநில அரசு சார்பு துறைகளுக்குத் தேவைப்படும் சிவப்பு ஆக்ஸைடு வர்ணம், சாலைகளில் போக்குவரத்து குறியிடும் இரப்பர் கலந்த வர்ணம் மற்றும் இதர வர்ணங்களை உற்பத்தி செய்து வழங்குவதாகும். இந்த நிறுவனத்தின் பங்கு மூலதனம் ரூ.10 இலட்சமாகும். டாபப் 2013–14 ஆம் ஆண்டில் ரூ. 3.08 கோடி விற்பனை அளவை எட்டியுள்ளது.



## 5. தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் (EDI)

மாநிலத்தில் தொழில் முனைவோரின் பயிற்சித் தேவைகளை நிறைவேற்றுதன் வாயிலாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை மேம்படுத்துவதை முதன்மை நோக்கமாகக்கொண்டு நவம்பர் 2001–இல் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் இலாப நோக்கமில்லாத சங்கமாக நிறுவப்பட்டது. தொடங்கப்பட்ட நாள் முதல் இந்நிறுவனம் 2012–13 வரையிலான காலத்தில் இலக்காக்கொண்ட 86,000 நபர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு பயிற்சி திட்டங்களை நடத்தியுள்ளது. 2013–14–இல் 17,525 நபர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

### 5.1 நோக்கம்

(i) தொழில் முனைவு பயிற்சிகள் மூலமாக குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களை முன்னேற்றுதல்

(ii) சொந்தமாக தொழில் நிறுவனங்களை துவக்குதலை இலட்சியமாகக்கொண்ட தொழில் முனைவோர்களுக்கு உதவுதல்

(iii) தொழில் முனைவோர் மேம்பாட்டிற்காகவும் பெரிய அளவில் தொழில் முனைவு கலாச்சாரத்தை

ஏற்படுத்தவும் பலதரப்பட்ட வியூகங்களை வகுத்தல்

(iv) அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்

(v) திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வாயிலாக வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துதல்

வேலை வாய்ப்பை உருவாக்குதல் மற்றும் பரவலாக்கப்பட்ட பொருளாதார வளர்ச்சிக்கும் தொழில் முனைவோர் மேம்பாடு என்பது முக்கியமான ஒன்றாகும். புதுமையான பயிற்சி வழிமுறைகள், தகுதிவாய்ந்த பயிற்றுநர்கள், ஆதரவு, ஆலோசனை வழங்கல், தரமாக கற்பித்தல் மற்றும் பயிற்சி உபகரணங்கள் ஆகியவற்றை பயன்படுத்துவதன் மூலம் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் தனது குறிக்கோளை அடைய முனைகிறது.

## 5.2 நவீன பயிற்சி வளாகம்

தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் தற்போதுள்ள கட்டிடத்துடன் அரசால், கிண்டியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 1.91 ஏக்கர் நிலத்தில் ரூ.5.15 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தில் தனது



நடவடிக்கைகளை விரிவு படுத்தி உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நவீன பயிற்சி வளாகத்தினை 25.6.2014 அன்று காணொலி காட்சி மூலம் திறந்து வைத்துள்ளார்கள். இது அனைத்து வகையிலும் உயர்தரத்திலான வகுப்பறைகள் மற்றும் உறைவிட வசதி போன்றவற்றைக் கொண்டுள்ளது.

## 5.3 புதிய பயிற்சி திட்டங்கள்

படித்த இளைஞர்களிடையே காணப்படும் வேலைவாய்ப்பின்மைக்கு தீர்வுகாண குறிப்பாக பெண்களிடையே, வேலைவாய்ப்பு உருவாக்க 2013–14ல் ஒரு சிறப்பு பயிற்சி திட்டத்தை துவக்கியது. அரசு 2013–14ல் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு ரூ. 5 கோடி நிதியுதவி செய்தது. இதில் ரூ. 4 கோடி தொழில் முனைவு பயிற்சிகள் மற்றும் திறன் வளர்த்தல் பயிற்சிகளை அளிக்கவும், ரூ.1 கோடி தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் நிர்வாகச் செலவுகளுக்குமென வழங்கப்பட்டது.

பல்வேறு பயிற்சித்திட்ட வகைகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

### 5.3.1 தொழில் முனைவு மேம்பாட்டு பயிற்சித்திட்டம் (Entrepreneurship Development Programme)

தொழில் முனைவு மேம்பாட்டு பயிற்சித்திட்டம், ஒரு பொருளாதார நடவடிக்கை அல்லது தொழில் நிறுவனத்தை வெற்றிகரமாக தொடங்க தேவையான திட்டமிடுதல், முன் முயற்சிகள் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவைகளில் பயிற்சி அளிப்பதை நோக்கமாகக்கொண்டது. இப் பயிற்சித்திட்டம் தொழில் முனைவுத்தேவைகள் பற்றிய வகுப்பறை பயிற்சிகள், வணிக வாய்ப்புகளை கண்டறிதல், ஆதரவளிக்கும் அமைப்புகளின் பல்வேறு உட்கூறுகளைக்கொண்ட திட்டங்கள், தொழில் நுட்ப ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் நீடித்திருக்க வல்லதான திட்ட அறிக்கைகள் சாதனைபுரிய வழிப்படுத்தும் பயிற்சிகள் மற்றும் நிறுவனத்தின் மேலாண்மையின் முக்கியத்துவம் ஆகியவற்றை கொண்டதாக இருக்கும், 2013–14ஆம் ஆண்டில் 736 நபர்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் இப் பயிற்சி பெற்றுள்ளனர்.



### 5.3.2 பயிற்றுனர்கள் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சித்திட்டம் (Faculty Development Programme)

மாணவர்களிடம் தொழில் முனைவின் சிறப்புக்களை தெளிவுறச் செய்து தொழில் முனைவின் மூலம் தங்களது வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்காக கல்லூரிகளில் இதற்கான அறிவு மற்றும் திறன்களை ஏற்படுத்துதல் இப்பயிற்சியின் நோக்கமாகும். அடுத்த கல்வியாண்டில் 150 பயிற்றுனர்கள் கல்லூரிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படவுள்ளனர்.

### 5.3.3 தொழில் முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சித்திட்டம் (Entrepreneurship cum Skill Development Programme)

பயிற்சி பெறுவோர்களுக்கு திறன் மேம்பாட்டினை வழங்கி அதன்மூலம் நவீன தொழில்நுட்பத்திறன்களை ஏற்படுத்தி மேற்கொள்ளவிருக்கும் திட்டங்களை தெரிவு செய்யத்தக்கவர்களாக ஆக்குதல் இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். அவர்கள் இயந்திரக் கூடப் பயிற்சி, இருசக்கர வாகன பழுது நீக்கம், உலோகங்களை ஒட்டுதல்

(welding), நாகரீக ஆடைகள் உணவு மற்றும் பழங்கள் பதப்படுத்துதல், வளைதளம் வடிவமைத்தல், மென்பொருள் பராமரிப்பு மற்றும் வலைப்பின்னலமைப்பு, தோல் பொருட்கள், வீட்டு உபயோக மின்சாதனப் பொருட்களை பழுது நீக்கம் செய்தல் ஆகியவற்றில் இத்திட்டத்தின் கீழ் 2013–14ல், 502 நபர்கள் பயன்பெற்றுள்ளனர்.

### 5.3.4 தொழில் நுட்பத்தை அடிப்படையாகக்கொண்ட தொழில் முனைவோர் மேம்பாட்டுப்பயிற்சி (Techology Based Entrepeneurship Development Pogramme)

இப்பயிற்சித்திட்டத்தின் கீழ் தோல், மின்னணு பொருட்கள் மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்கள், சூரிய ஒளி சக்தி, தானியங்கி வாகனங்கள் தொழில்நுட்பம், ஆகியவற்றிலான பயிற்சிகள் தொழில் முனைவோ மேம்பாட்டு நிறுவன நிதி உதவியுடன் நடத்தப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ், 2013–14ல் 206 நபர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.



### 5.3.5 வேளாண்மைத் தொழில்முனைவு மேம்பாட்டுத் திட்டம்(Agripreneurship Development Programme)

இத்திட்டத்தின் நோக்கம் தொழில்நுட்பங்கள் மற்றும் மேலாண்மை காரணிகள் வழியாக வேளாண்மைப்பிரிவை விரிவாக்கம் செய்து கொள்வதற்காக வேளாண்மைத்தொழில் முனைவோர் எனும் புதியவகை தொழில்முனைவோர்களை உருவாக்குதல் ஆகும். இப்பயிற்சியின் மூலம் 117 வேளாண்மைப் பட்டதாரிகளுக்கு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர் மற்றும் சிதம்பரத்திலுள்ள அண்ணாமலை பல்கலைக்கழகம், ஆகியவற்றின் மூலம் இப்பயிற்சி வழங்கப்பட்டது.

### 5.3.6 குழுமங்கள் விழிப்புணர்வுத் திட்டம் (Cluster Awareness Pogramme)

இத்திட்டம், அலுமினியம், அரிசி ஆலை, தானியங்கி வாகன உதிரிபாகங்கள், மோட்டார் பம்ப், துணிநூல், தீப்பெட்டி, முந்திரி மற்றும் கயிறு ஆகிய தொழில்களில் அமையும் குறு மற்றும் சிறு தொழில் நிறுவன குழுமங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக்

கொண்டுள்ளது. இப் பயிற்சி திட்டங்கள் செயல்பாட்டு திறனை வளர்த்துக் கொண்டு உலகளாவிய போட்டியில் தங்களை நிலை நிறுத்த உதவும். 2013–14 ல் 80 தொழில் முனைவோர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 320 தொழில் முனைவோர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

### 5.3.7 கல்லூரிகளில் தொழில் முனைவோர் மேம்பாட்டு மையங்கள் ஏற்படுத்துதல் (Establishment of Entrepreneurs Development Cell in Colleges)

தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், நிறுவன தொழில்நுட்ப பயிற்சி அளிக்கும் வகையில் தொழில் முனைவோர் மேம்பாட்டு பிரிவுகளை மாநிலத்தில் 50 உயர்கல்வி நிலையங்களில் ரூ. 1 இலட்சம் செலவில் ஏற்படுத்தும் திட்டம் ஒன்றை நிறைவேற்றி வருகிறது. இப்பிரிவுகள் மாணவர்களிடையே புதுமைபடைக்கும் ஆற்றலை ஏற்படுத்தி தொழில் முனைவுப்பண்பை வளர்க்க உதவும்.



### 5.3.8 தொழில் முனைவோர் விழிப்புணர்வு முகாம் (Entrepreneurship Awareness Camp)

பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே மாற்று முறையில் வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்ள வேண்டி தொழில் முனைவோரின் பன்முகத் தன்மையை சிறப்புற வெளிப்படுத்துவதற்கென தொழில் முனைவோர் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு தொழில் முனைவோர் விழிப்புணர்வு முகாமிலும் சுமார் 75 மாணவர்களுக்கு தொழில் முனைவின் அம்சங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அடுத்த கல்வியாண்டில் 3,750 மாணவர்கள் பயனடைவர்.

### 5.3.9 மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (Women Entrepreneurship Development Programme)

இப்பயிற்சி திட்டத்தின் நோக்கம் மகளிர் தொழில் நிறுவனங்களை சொந்தமாக நிறுவ மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்த, திட்டமிடல் மற்றும்

முன்முயற்சிகள் மேற்கொள்ள மற்றும் செயல்படுத்த பயிற்சி அளிப்பதாகும். படித்து வேலையில்லாத மகளிரை இலக்காகக்கொண்டு அவர்கள் வெற்றிகரமாக வணிக நடவடிக்கைகள் ஆரம்பிக்கவும், தொடர்ந்து நடத்தவும் பயிற்சி அளிக்கப்படும். 2013–14ல் 375 மகளிருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன.

### 5.3.10 மகளிர் தொழில் முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டுத்திட்டம் (Women Entrepreneur Skill Development Programme)

இப்பயிற்சி, ஒரு புதிய தொழில் முனைவோருக்குத் தேவைப்படும் அடிப்படை தொழில் முனைவோர் திறன்களில் பயிற்சி அளிப்பதோடு தேர்ந்தெடுக்கப்பட்ட மரபுசார்ந்த மற்றும் மரபு சாரா தொழில் நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும் திறமைகளை அளிக்கிறது. பயிற்சி அமைப்பு, சாதனை செய்தல், ஊக்குவித்தல், வாய்ப்புகளில் வழிகாட்டுதல் நடைமுறையில் வழிகாட்டுதல், வணிகத்திட்டம் தயாரித்தல், மேலாண்மை வழிகாட்டல் மற்றும் திறன் அளிக்கும் பயிற்சி ஆகியவை இப்பயிற்சித் திட்டத்தில்



அடங்கும். 2013–14இல் 500 மகளிருக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன.

### 5.3.11 ஆசான் உருவாக்கும் பயிற்சி (Mentorship Training)

ஆசான் உருவாக்கும் பயிற்சி திட்டத்தில், தொழில் முனைவோர்களுக்கு பொருளாதாரத்தில் நிலவும் சந்தைப்போக்குகள் (Market trends) நிதி நிறுவனங்களை அணுகும் விதம், அரசின் சட்டம் மற்றும் விதிகளை புரிந்துகொள்ளல் ஆகியவை அடங்கும். ஆசான் உருவாக்கும் மையங்கள் (Mentorship cell) அமைக்க தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் பத்து தொழிற்சங்கங்களுக்கு ரூ.10 இலட்சம் வழங்கியுள்ளது.

### 5.3.12 தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தில் மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பிரிவு (Women Entrepreneurship Development Cell in EDI)

தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தால் மகளிருக்காக நடத்தப்படும் தொழில்முனைவோர் பயிற்சித்திட்டங்களை கண்காணிப்பதற்காக ஒரு மகளிர்

தொழில் முனைவோர் மேம்பாட்டுப்பிரிவு ஏற்படுத்தப் பட்டுள்ளது. இப்பிரிவு மகளிர் தொழில் முனைவோர் தங்களது தொழில்நுட்ப திறன்களை மேல்நிலைப்படுத்தி, சுய தொழில் துவங்க வழிகாட்டுகிறது. மகளிரின் மேலாண்மைத்திறன் அதிகரிக்க பயிற்சி அளிப்பதுடன் கூடுதலாக அவர்களின் தொழில் முனைவுத் தன்மையை ஏற்படுத்த, சிறப்பு கருத்தரங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மாணவிகளிடையே ஸ்ரீரங்கம், சிதம்பரம் மற்றும் மதுரை ஆகிய மூன்று இடங்களில் மகளிருக்கென தொழில் முனைவோர் கருத்தரங்குகளை இப்பிரிவு நடத்தியுள்ளது.

### 5.4 சூரிய ஒளி மின்சக்தி சாதனங்கள் பராமரிப்பு மற்றும் பயன்பாடு (Solar Equipments Maintenance and Usage)

தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் மகளிர் மேம்பாட்டு நிறுவனத்துடன் சேர்ந்து 4000 சுய உதவி குழுக்கள் மற்றும் கிராமப்புற மகளிருக்கு சூரிய சக்தி உபகரணங்களை பயன்படுத்துதல் மற்றும் பராமரித்தல் குறித்து பயிற்சி அளிக்க ஒரு பெரிய



அளவிலான திட்டத்தை மேற்கொண்டுள்ளது. இந்தப் பயிற்சித்திட்டங்கள் 385 வட்டாரங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு 2100 மகளிருக்கு பயிற்சி அளித்துள்ளது. மேலும் 1900 மகளிருக்கு பயிற்சிகள் அளிக்கப்படும்.

### 5.5 வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும்திட்டம் (UYEGP)

2013–14–இல் இத்திட்டத்தின் கீழ் 5311 தொழில் முனைவோர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

#### 5.5.1 பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)

2013–14–இல் இத்திட்டத்தின் கீழ் 1536 தொழில் முனைவோர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

#### 5.5.2 புதிய தொழில் முனைவோர் – தொழில் நிறுவன மேம்பாட்டுத்திட்டம் (NEEDS)

முதல் தலைமுறையினருக்கான ‘புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்’ கீழ் பயிற்சித்திட்டம், மாநிலம் முழுவதும்

பிப்ரவரி 2014 வரை பல பிரிவுகளில் 883 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## 5.6 பிற பயிற்சி திட்டங்கள் (Other programmes)

இவை தவிர்த்து, கீழ்காணும் பல்வேறு பங்களிப்போர் பயிற்சிகளையும் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் நடத்தி வருகிறது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நடத்தும் நிறுவனம் | பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | உணவு பதப்படுத்துதல் | தேசிய உணவு பதப்படுத்துதல் நிறுவனம் | 600 |
| 2 | பயிற்றுனர் மேம்பாடு | தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனம் | 39 |
| 3 | சூரிய ஒளி சாதன பயிற்சி | –அதே– | 536 |
| 4 | தொழில் முனைவோர் விழிப்புனர்வு பயிற்சி | –அதே– | 20,000 |
| 5 | தொழில் முனைவோர் விழிப்புனர்வு முகாம் | மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் துறை மற்றும் கனரா வங்கி | 2,085<br>300 |
| 6 | தொழில் முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சி | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தேசிய நிறுவனம், ஹைதராபாத் | 300 |
| 7 | திறன் வளர்ப்புப் பயிற்சி | தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிகத் துறை | 313 |



## 5.7 திறன் மேம்பாட்டுத்திட்டம் (Skill Development Programmes)

தமிழக அரசின் நிதியுதவியோடு நடத்தப்படும் இலவசப் பயிற்சி திட்டங்களோடு தேவைக்கேற்ப கட்டணம் செலுத்தி பயிற்சி பெறும் திட்டங்களும் நடத்தப்படுகின்றன. 2013–14ல் கீழ்வரும் அத்தகைய திட்டங்கள் நடத்தப்பட்டன.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நடத்தும் நிறுவனம் | பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சூரிய சக்தி சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் பயிற்சி | தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் | 241 |
| 2 | தங்க நகை மதிப்பீட்டு தொழில் நுட்பங்கள் பயிற்சி | தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் | 97 |
| 3 | சரிகை மற்றும் வேலைப்பாடுகள் பயிற்சி | தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் | 14 |
| 4 | கழிவிலிருந்து பொருள் ஈட்டுதல் | தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் | 404 |

**5.8 மைய அரசின் நிதியுதவியோடு நடத்தப்பட்ட பயிற்சித்திட்டங்கள் (Programmes sponsored by the Department of Science and Technology, Government of India)**

| | | |
|---|---|---|
| 1. | மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத்திட்டம் (Women Entrepreneurship Development Programme) | 75 பயனாளிகள் |
| 2. | பயிற்றுநர்கள் மேம்பாட்டுப் பயிற்சித்திட்டம் (Faculty Development programme) | 50 பயனாளிகள் |
| 3. | தொழில் முனைவோர் மேம்பாட்டுத்திட்டம் (Entrepreneurship Development Programme) | 75 பயனாளிகள் |
| 4. | தொழில் நுட்பத்தை அடிப்படையாகக்கொண்ட தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி (Technology Entrepreneurship Development Programme) | 55 பயனாளிகள் |

**ப. மோகன்**
**அமைச்சர் ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலன்**



**இணைப்பு – அ**

**15 தொழிற்கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளின் பட்டியல்**

1 கரும்பாலம்
2 மகாலிங்கா
3 இதலார்
4 பந்தலூர்
5 கட்டபெட்டு
6 சாலிஸ்பரி
7 ஃபிராண்டியர்
8 பிதர்காடு
9 குந்தா
10 மேற்குநாடு
11 கிண்ணக்கோரை
12 பிக்கட்டி
13 எபநாடு
14 கைக்காட்டி
15 மஞ்சூர்

## இணைப்பு – ஆ

### 44 தாய்கோ வங்கி கிளைகளின் பட்டியல்

| வ.எண் | கிளை | வ.எண் | கிளை |
|---|---|---|---|
| 1. | ஆழ்வார்பேட்டை | 23. | நெய்வேலி |
| 2. | அம்பத்தூர் | 24. | ஒட்டஞ்சத்திரம் |
| 3. | ஆத்தூர் | 25. | பெரம்பலூர் |
| 4. | சேப்பாக்கம் | 26. | பொள்ளாச்சி |
| 5. | குன்னூர் | 27. | புதுக்கோட்டை |
| 6. | கோயம்பத்தூர் | 28. | இராஜா அண்ணாமலைபுரம் |
| 7. | திண்டுக்கல் | 29. | இராமநாதபுரம் |
| 8. | தர்மபுரி | 30. | சாத்தூர் |
| 9. | எழும்பூர் | 31. | சேலம் |
| 10. | ஈரோடு | 32. | சிவகாசி |
| 11. | ஈக்காட்டுத்தாங்கல் | 33. | தஞ்சாவூர் |
| 12. | கூடலூர் | 34. | தேனி |
| 13. | கரூர் | 35. | திருவாரூர் |
| 14. | காரைக்குடி | 36. | திருவெற்றியூர் |
| 15. | காஞ்சிபுரம் | 37. | திருப்பூர் |
| 16. | கிருஷ்ணகிரி | 38. | திருநெல்வேலி |
| 17. | கும்பகோணம் | 39. | திருவண்ணாமலை |
| 18. | கோவில்பட்டி | 40. | திருச்சி |
| 19. | மதுரை | 41. | தூத்துக்குடி |
| 20. | நாகர்கோவில் | 42. | வேலூர் |
| 21. | நாமக்கல் | 43. | விழுப்புரம் |
| 22. | நாகப்பட்டினம் | 44. | வியாசர்பாடி |



## இணைப்பு–இ

### மாநிலத்தில் செயல்பட்டு வரும் தொழிற் பேட்டைகள்

| வ. எண் | மாவட்டம் | அமைவிடம் | துவங்கப் பட்ட ஆண்டு | மொத்த பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|---|
| 1 | சென்னை | கிண்டி (அ) | 1958 | 404.08 |
| 2 | | அரும்பாக்கம் (சி) | 1979 | 3.92 |
| 3 | | வில்லிவாக்கம் (சி) | 1979 | 2.04 |
| 4 | | கொடுங்கையூர்(சி) | 1979 | 7.88 |
| 5 | திருவள்ளூர் | அம்பத்தூர் (அ) | 1963 | 1167.00 |
| 6 | | காக்களூர் (அ) | 1988 | 199.00 |
| 7 | | காக்களூர் (பகுதி 2) (அ) | 2009 | 84.01 |
| 8 | | திருமழிசை (சி) | 1988 | 160.85 |
| 9 | | கும்மிடிபூண்டி (சி) | 1988 | 25.24 |
| 10 | | ஆர்.கே.பேட்டை (சி) | 1996 | 8.15 |
| 11 | | விச்சூர் (சி) | 1994 | 59.16 |
| 12 | | திருமுல்லைவாயல் (ம.தொ.பே.) (சி) | 2001 | 225.80 |
| 13 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் (அ) | 1968 | 37.95 |
| 14 | | மறைமலைநகர் (சி) | 1981 | 39.50 |
| 15 | | ஆலத்தூர் (சி) | 1984 | 150.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 16 | | திருமுடிவாக்கம் (சி) (ம.தொ.பே. உட்பட) | 1993 | 201.11 |
| 17 | வேலூர் | காட்பாடி (அ) | 1968 | 19.48 |
| 18 | | அரக்கோணம் (அ) | 1968 | 11.09 |
| 19 | | அரக்கோணம் (பகுதி 2) (அ) | 2009 | 40.65 |
| 20 | | ராணிப்பேட்டை (சி) | 1972 | 113.44 |
| 21 | | முகுந்தராயபுரம் (சி) | 1980 | 86.19 |
| 22 | | வன்னிவேடு (சி) | 1987 | 16.44 |
| 23 | | விண்ணமங்கலம் (சி) | 2009 | 10.49 |
| 24 | | வாணியம்பாடி | 2013 | 7.08 |
| 25 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை (அ) | 1968 | 15.56 |
| 26 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி (அ) | 1965 | 41.86 |
| 27 | | ஊத்தங்கரை (சி) | 1995 | 41.28 |
| 28 | | ஒசூர் (சிப்காட்) (சி) | 1976 | 95.15 |
| 29 | | ஒசூர் (புதியது) (சி) | 1999 | 18.80 |
| 30 | | பர்கூர் (சி) | 1995 | 13.05 |
| 31 | | பர்கூர் (பகுதி 2) (சி) | 2009 | 18.59 |
| 32 | | போலுப்பள்ளி (சி) | 2009 | 60.96 |
| 33 | தருமபுரி | தருமபுரி (அ) | 1965 | 20.28 |
| 34 | | கடகத்தூர் (சி) | 2009 | 7.02 |
| 35 | சேலம் | சேலம் (அ) | 1967 | 19.55 |
| 36 | | மேட்டூர் (அ) | 1967 | 184.38 |



| | | | | |
|---|---|---|---|---|
| 37 | | கருப்பூர் (ம.தொ.பே.) (சி) | 2004 | 51.74 |
| 38 | | வீரபாண்டி (சி) | 1993 | 9.79 |
| 39 | நாமக்கல் | நாமக்கல் (சி) | 1977 | 10.09 |
| 40 | | திருச்செங்கோடு (சி) | 1980 | 9.18 |
| 41 | ஈரோடு | ஈரோடு (அ) | 1959 | 25.13 |
| 42 | | நஞ்சை ஊத்துக்குளி (சி) | 1995 | 13.05 |
| 43 | கோயம்புத்தூர் | குறிச்சி (அ) | 1972 | 88.43 |
| 44 | | மலுமிச்சம்பட்டி (சி) | 1994 | 36.14 |
| 45 | திருப்பூர் | கணபதிபாளையம் (சி) | 1993 | 17.10 |
| 46 | | திருப்பூர் (சி) | 1978 | 10.14 |
| 47 | | குடிமங்கலம் (சி) | 1992 | 6.74 |
| 48 | | ராசாத்த வலசு (சி) | 2011 | 51.80 |
| 49 | நீலகிரி | ஊட்டி (சி) | 1981 | 10.65 |
| 50 | கடலூர் | கடலூர் (அ) | 1971 | 15.60 |
| 51 | | வடலூர்(அ) | 1972 | 26.22 |
| 52 | விழுப்புரம் | ஆசனூர் (சி) | 2009 | 107.80 |
| 53 | | வெண்மணி யாத்தூர்(சி) | 2011 | 38.88 |
| 54 | பெரம்பலூர் | எலம்பலூர்(சி) | 2009 | 44.48 |
| 55 | தஞ்சாவூர் | கும்பகோணம் (அ) | 1968 | 32.30 |
| 56 | | தஞ்சாவூர்(அ) | 1968 | 21.94 |
| 57 | | பிள்ளையார்பட்டி (சி) | 1974 | 10.96 |
| 58 | | நாஞ்சிக்கோட்டை (சி) | 1996 | 26.30 |

| | | | | |
|---|---|---|---|---|
| 59 | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் (அ) | 1966 | 20.97 |
| 60 | | மயிலாடுதுறை (சி) | 2009 | 12.56 |
| 61 | திருச்சி | துவாக்குடி (அ) | 1974 | 478.38 |
| 62 | | திருவெறும்பூர் (அ) | 1974 | 74.50 |
| 63 | | அரியமங்கலம் (அ) | 1974 | 17.64 |
| 64 | | வாழவந்தான்கோட்டை (ம.தொ.பே.) (சி) பகுதி–1 | 2003 | 51.70 |
| 65 | | வாழவந்தான்கோட்டை (பகுதி 2) (சி) | 2008 | 87.18 |
| 66 | | வாழவந்தான்கோட்டை (பகுதி 3) (சி) | 2009 | 26.84 |
| 67 | | கும்பக்குடி (சி) | 2009 | 24.46 |
| 68 | கரூர் | கரூர் (அ) | 1974 | 26.63 |
| 69 | | கரூர் ஆத்தூர் (சி) | 1993 | 36.29 |
| 70 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை (அ) | 1974 | 23.18 |
| 71 | | புதுக்கோட்டை (சிப்காட்) (சி) | 1988 | 51.45 |
| 72 | | மாத்தூர் (சி) | 1975 | 26.00 |
| 73 | | மாத்தூர் (புதியது) | 2013 | 19.92 |
| 74 | தேனி | தேனி (அ) | 1963 | 26.59 |
| 75 | | ஆண்டிப்பட்டி (சி) | 1994 | 22.34 |
| 76 | திண்டுக்கல் | திண்டுக்கல் (அ) | 1965 | 39.90 |
| 77 | | வத்தலகுண்டு (அ) | 1965 | 16.26 |
| 78 | மதுரை | மதுரை (கே.புதூர்) (அ) | 1960 | 56.05 |
| 79 | | கப்பலூர் (அ) | 1966 | 534.64 |



| | | | | |
|---|---|---|---|---|
| 80 | | கப்பலூர் (ம.தொ.பே) (சி) | 2007 | 18.45 |
| 81 | இராமநாதபுரம் | பரமக்குடி (சி) | 1976 | 10.00 |
| 82 | | கீழநாகாச்சி (சி) | 1993 | 10.00 |
| 83 | | உரப்புளி (சி) | 1993 | 12.14 |
| 84 | சிவகங்கை | காரைக்குடி (அ) | 1966 | 180.19 |
| 85 | | சிவகங்கை (அ) | 1966 | 70.61 |
| 86 | | கிருங்காக்கோட்டை (சி) | 1993 | 21.85 |
| 87 | விருதுநகர் | விருதுநகர் (அ) | 1958 | 45.65 |
| 88 | | ராசபாளையம் (சி) | 1995 | 41.13 |
| 89 | | விருதுநகர் (நகர் புறம்) | 2013 | 37.54 |
| 90 | திருநெல்வேலி | பேட்டை (அ) | 1959 | 50.55 |
| 91 | | கடையநல்லூர் (சி) | 1992 | 10.00 |
| 92 | | வள்ளியூர் (சி) | 2005 | 16.75 |
| 93 | | வள்ளியூர் (பகுதி 2) (சி) | 2010 | 23.16 |
| 94 | தூத்துக்குடி | கோவில்பட்டி (அ) | 1962 | 85.54 |
| 95 | | தூத்துக்குடி (சி) | 1988 | 24.18 |
| 96 | கன்னியாகுமரி | கோணம் (அ) | 1964 | 20.70 |
| 97 | | மார்த்தாண்டம் (அ) | 1964 | 7.50 |
| | | **மொத்தம்** | | **6640.91** |

(அ) – அரசு தொழிற் பேட்டைகள் (சி) – சிட்கோ தொழிற் பேட்டைகள்
(ம.தொ.பே) மகளிர் தொழிற்பேட்டைகள்

# இணைப்பு –ஈ
# குறு,சிறு நிறுவனங்கள் – குழும வளர்ச்சித் திட்டம் (பொது வசதி மையம்) மைய அரசின் இறுதி ஒப்புதல் பெறப்பட்ட திட்டங்கள் (29)

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எண் | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | மைய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | சிறப்பு நோக்க ஊர்தி பங்கு | வங்கிக் கடன் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஜவ்வரிசி குழுமம், சேலம் (பகுதி–1) | 92.06 | 73.31 | 0.00 | 18.75 | 0.00 | திட்டம் முடிவு பெற்று உற்பத்தி தொடங்கப் பட்டது. |
| 2 | தீப்பெட்டிக் குழுமம், குடியாத்தம் | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | திட்டம் முடிவு பெற்று உற்பத்தி தொடங்கப் பட்டது. |
| 3 | தீப்பெட்டிக் குழுமம், விருதுநகர் | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | திட்டம் முடிவு பெற்று உற்பத்தி தொடங்கப் பட்டது. |
| 4 | தீப்பெட்டிக் குழுமம், ஸ்ரீவில்லிப் புத்தூர். | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | திட்டம் முடிவு பெற்று உற்பத்தி தொடங்கப் பட்டது. |
| 5 | தீப்பெட்டிக் குழுமம், சாத்தூர் | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | திட்டம் முடிவு பெற்று உற்பத்தி தொடங்கப் பட்டது. |
| 6 | தீப்பெட்டிக் குழுமம், கழுகுமலை | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | திட்டம் முடிவு பெற்று உற்பத்தி தொடங்கப் பட்டது. |
| 7 | தீப்பெட்டிக் குழுமம், கோவில் பட்டி | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | திட்டம் முடிவு பெற்று உற்பத்தி தொடங்கப் பட்டது. |



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 8 | மாவு அரவை இயந்திரம் தயாரிக்கும் குழுமம், கோயம் புத்தூர். | 288.20 | 99.00 | 16.52 | 172.68 | 0.00 | திட்டம் நடைமுறைப்படுத் தப் பட்டு வருகிறது |
| 9 | செங்கல் சூளை குழுமம், திருநெல்வே லி. | 227.27 | 122.73 | 22.72 | 29.55 | 52.27 | திட்டம் நடைமுறைப்படு த்தப் பட்டு வருகிறது |
| 10 | பீங்கான் குழுமம், விருதாச் சலம். | 73.10 | 43.86 | மாநில அரசு 2 தொழிற் கூடங்களும் மற்றும் ரூ. 9.57 இலட்சமும் வழங்கி உள்ளது. | 18.45 | 10.79 | திட்டம் நடைமுறைப்படு த்தப் பட்டு வருகிறது |
| 11 | கயிறு குழுமம், சிவகங்கை. | 658.90 | 500.01 | 65.89 | 93.00 | 0.00 | திட்டம் நடைமுறைப்படு த்தப் பட்டு வருகிறது |
| 12 | பொறியியல் குழுமம், இராணிப் பேட்டை | 927.08 | 616.39 | 97.21 | 109.35 | 104.13 | திட்டம் நடைமுறைப்படு த்தப் பட்டு வருகிறது |
| 13 | அச்சுக் குழுமம், சிவகாசி. | 1314.17 | 767.81 | 90.66 | 180.28 | 276.48 | திட்டம் நடைமுறைப்படு த்தப் பட்டு வருகிறது |
| 14 | அரிசி ஆலைக் குழுமம், கீழப்பாவூர். | 690.58 | 466.03 | 69.05 | 145.50 | 10.00 | திட்டம் நடைமுறைப்படு த்தப் பட்டு வருகிறது |
| 15 | தானியங்கி உதிரி பாகங்கள் குழுமம், ஒசூர். | 690.94 | 439.89 | 70.75 | 105.30 | 75.00 | திட்டம் நடைமுறைப்படு த்தப் பட்டு வருகிறது |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 16 | அச்சு குழுமம், கிருஷ்ணகிரி | 1072.52 | 964.14 | 100.00 | 108.38 | 0.00 | திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது |
| 17 | அரிசி ஆலைக் குழுமம், ஆலங்குளம் | 787.00 | 550.25 | 78.91 | 83.75 | 74.09 | மைய அரசின் ஒப்புதல் பெறப் பட்டுள்ளது. மானியம் இன்னமும் பெறப்படவில்லை |
| 18 | ஜவ்வரிசி குழுமம், சேலம். பகுதி 2 | 247.17 | 221.64 | 0.00 | 25.53 | 0.00 | மைய அரசின் இறுதி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ஆயத்த பணிகள் நடைபெற்று கொண்டு இருக்கின்றன. |
| 19 | அரிசி ஆலைக் குழுமம், தஞ்சாவூர் | 212.06 | 100.23 | 40.43 | 21.40 | 50.00 | மைய அரசின் இறுதி ஒப்புதல் பெறப்பட்டுள்ளதுஆயத்த பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 20 | ஸ்டைன்லெஸ் ஸ்டீல் பேப்ரிகேஷன்ஸ், சேலம் | 1632.74 | 1277.71 | 100.00 | 255.03 | 0.00 | மைய அரசின் இறுதி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது ஆயத்த பணிகள் நடைபெற்று வருகின்றன, |
| 21 | சென்னை பிளாஸ்டிக் குழுமம், காஞ்சிபுரம் | 1485.12 | 1026.96 | 100.00 | 258.16 | 100.00 | மைய அரசின் இறுதி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது ஆயத்த பணிகள் நடைபெற்று வருகின்றன. |



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 22 | ரீப்ராக்டரி குழுமம் விருதாச் சலம் | 896.46 | 571.44 | 89.85 | 135.17 | 100.00 | மைய அரசின் இறுதி ஒப்புதல் பெறப்பட உள்ளது. ஆயத்த பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 23 | பொறியியல் குழுமம், பரமக்குடி | 498.89 | 373.80 | 23.34 | 53.75 | 48.00 | மைய அரசின் இறுதி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ஆயத்த பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 24 | கேட் & கிரில் குழுமம், திருமுல்லை வாயில் | 284.87 | 197.93 | 29.69 | 57.25 | 0.00 | மைய அரசின் இறுதி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ஆயத்த பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 25 | ஆயத்த ஆடை குழுமம் (பெண்கள்), தளவாய் புரம் | 104.24 | 74.28 | 09.36 | 20.60 | 0.00 | மைய அரசின் இறுதி ஆணை பெறப்பட்டுள்ளது. ஆயத்த பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 26 | தங்க ஆபரணக் குழுமம், மதுரை | 356.46 | 255.80 | 29.14 | 39.92 | 31.60 | மைய அரசின் இறுதி ஆணை பெறப்பட்டுள்ளது. ஆயத்த பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 27 | தானியங்கி மற்றும் விசைத்தறி குழுமம், சேலம். | 1333.51 | 886.45 | 98.78 | 162.18 | 186.10 | மைய அரசின் இறுதி ஆணை பெறப்பட உள்ளது. ஆயத்த பணிகள் நடைபெற்று வருகின்றன. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 28 | தீப்பெட்டிக் குழுமம், ஓ.மேட்டுப் பட்டி | 346.89 | 204.64 | 36.00 | 42.50 | 63.75 | மைய அரசின் இறுதி ஆணை பெறப்பட்டுள்ளது. ஆயத்த பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 29 | ஸ்டைன்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் குழுமம், கும்பக் கோணம் | 126.30 | 98.83 | 7.90 | 19.57 | 0.00 | மைய அரசின் இறுதி ஆணை பெறப்பட்டுள்ளது. ஆயத்த பணிகள் நடைபெற்று வருகின்றன. |



## இணைப்பு – உ

## குறு,சிறு நிறுவனங்கள் – குழும வளர்ச்சித் திட்டம் (பொது வசதி மையம்) மத்தியஅரசின் கொள்கைஅளவு ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்கள் (4)

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எண் | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | மைய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | வங்கிக் கடன் | சிறப்பு நோக்க ஊர்தி பங்கு | குறிப்புரை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பொறியியல் குழுமம், திண்டுக்கல் | 971.29 | 651.34 | 97.13 | 90.00 | 132.82 | மைய அரசின் இறுதி ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது |
| 2 | அரிசி மில் குழுமம் காங்கேயம் | 750.53 | 525.37 | 75.05 | 55.00 | 95.11 | மைய அரசின் இறுதி ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது |
| 3 | பொறியியல் குழுமம், அம்பத்தூர் | 1124.42 | 805.33 | 54.44 | 150.00 | 114.65 | மைய அரசின் இறுதி ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது |
| 4 | கயிறு குழுமம், ஈரோடு | 600.00 | 411.93 | 48.65 | 79.42 | 60.00 | மைய அரசின் இறுதி ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது |

## இணைப்பு – ஊ
## குறு,சிறு நிறுவனங்கள் – குழும வளர்ச்சித் திட்டம்
## ( பொது வசதி மையம்)
## மத்திய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட வேண்டிய திட்டங்கள்

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எண் | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | மைய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | சிறப்பு நோக்க ஊர்தி பங்கு | வங்கிக் கடன் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | சிமெண்ட் குழாய் குழுமம், சின்ன தாராபுரம் | 722.52 | 486.46 | 55.85 | 85.75 | 94.96 | மைய அரசுக்கு திட்ட அறிக்கை அனுப்பப்பட்டு, ஒப்புதல் எதிர்ப் பார்க்கப் படுகிறது. |
| 2 | ஆயத்த ஆடை குழுமம், தளவாய்புரம் | 1363.70 | 991.37 | 99.00 | 137.91 | 135.42 | மைய அரசுக்கு திட்ட அறிக்கை அனுப்பப்பட்டு , ஒப்புதல் எதிர்ப்பார்க்கப் படுகிறது. |
| 3. | தீப்பெட்டிக் குழுமம், சாத்தூர் (பகுதி–2) | 135.76 | 105.09 | 0.00 | 13.87 | 16.80 | மைய அரசு அறிவுறுத்தியப்படி திட்ட அறிக்கை திருத்தப்பட்டு வருகிறது. |
| 4 | அரிசி ஆலைக் குழுமம், திருச்செந்தூர் | 1070.00 | 711.60 | 100.00 | 123.40 | 135.00 | மைய அரசுக்கு திட்ட அறிக்கை அனுப்பபட்டு, ஒப்புதல் எதிர்ப்பார்க்கப் படுகிறது. |



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | தங்க ஆபரணக் குழுமம்,திருச்சி | 365.80 | 292.84 | 36.58 | 36.58 | 0.00 | மைய அரசுக்கு திட்ட அறிக்கை அனுப்பபட்டு, ஒப்புதல் எதிர்ப்பார்க்கப் படுகிறது. |
| 6 | அச்சுக் குழுமம், சேலம் | 1450.00 | 1250.00 | 0.00 | 200.00 | 0.00 | மைய அரசுக்கு கண்டறி சோதனை அறிக்கை அனுப்பபட்டு, ஒப்புதல் எதிர்ப்பார்க்கப் படுகிறது. |
| 7 | பொறியியல் குழுமம், பெருங்குடி | 77.00 | 59.60 | 7.45 | 5.50 | 4.45 | திட்ட அறிக்கை திருத்தப்பட்டு வருகிறது. |
| 8 | பிளாஸ்டிக் குழுமம், மதுரை | 524.42 | 342.96 | 33.11 | 73.35 | 75.00 | திட்ட அறிக்கை திருத்தப்பட்டு வருகிறது. |
| 9 | சுண்ணாம்புக் குழுமம் திருநெல் வேலி | 788.45 | 630.73 | 78.85 | 78.87 | 0.00 | மைய அரசுக்கு திட்ட அறிக்கை அனுப்பப்பட்டு ஒப்புதல் எதிர்பார்க்கப்– படுகிறது. |
| 10 | பட்டு நெசவுக் குழுமம் சேலம் (கண்டறி சோதனை அறிக்கை – திட்டமதிப்பீடு) | 25.00 | 19.25 | 3.17 | 2.58 | 0.00 | கண்டறி சோதனை அறிக்கை மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

## இணைப்பு – எ

## குறு,சிறு நிறுவனங்கள் – குழும வளர்ச்சித் திட்டம் ( பொது வசதி மையம்) மாநில அரசுசின் பரிசீலனையில் உள்ள திட்டங்கள்

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எண் | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | மைய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | சிறப்பு நோக்க ஊர்தி பங்கு | வங்கிக் கடன் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | விசைத்தறி குழுமம், இராசிபுரம் | 550.54 | 371.86 | 45.51 | 59.12 | 74.05 | மைய அரசுக்கு திட்ட அறிக்கை அனுப்பப்பட்டு ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. |
| 2 | தீப்பெட்டிக் குழுமம், சிவகாசி | 293.77 | 177.80 | 29.38 | 36.59 | 50.00 | மைய அரசுக்கு திட்ட அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. |

## இணைப்பு – ஏ

## குறு,சிறு நிறுவனங்கள் – குழும வளர்ச்சித் திட்டம் ( பொது வசதி மையம்) செயல்படுத்தும் முகமை – சிட்கோ நிறுவனத்திடம் பரிசீலனையில் உள்ள திட்டம்

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எண் | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | மைய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | சிறப்பு நோக்க ஊர்தி பங்கு | வங்கிக் கடன் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | முந்திரி குழுமம், கன்னியாகுமரி | 1486.95 | 1277.16 | 61.09 | 148.69 | 0.00 | கருத்துரு தயாரிக்கப்பட்டு வருகிறது |



## இணைப்பு – ஐ

## குறு,சிறு நிறுவனங்கள் – குழும வளர்ச்சித் திட்டம் ( பொது வசதி மையம்) நில நிருவாகத் துறையிடமிருந்து பெறப்படவேண்டிய கண்டறி சோதனை அறிக்கை

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எண் | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | மைய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | சிறப்பு நோக்க ஊர்தி பங்கு | வங்கிக் கடன் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | தோல் இராணிப் பேட்டை | 2183.17 | 1500.00 | 0.00 | 683.17 | 0.00 | திட்ட அறிக்கை தயாரிப்பில் உள்ளது. |

## இணைப்பு – ஒ
## குறு,சிறு நிறுவனங்கள் – குழும வளர்ச்சித் திட்டம்
## ( பொது வசதி மையம்)
## மைய அரசால் ஏற்றுக் கொள்ளப்படாத மற்றும் திருத்தியமைக்கப்பட வேண்டிய திட்டங்கள்

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எண் | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | மைய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | சிறப்பு நோக்க ஊர்தி பங்கு | வங்கிக் கடன் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கயிறு குழுமம், பொள்ளாச்சி | 1067.89 | 736.93 | 100.00 | 110.96 | 120.00 | திட்ட அறிக்கை திருத்தப்பட்டு வருகிறது |
| 2 | அட்டைப் பெட்டி குழுமம், திருவள்ளூர் | 1884.35 | 1050.00 | 100.00 | 534.35 | 200.00 | திட்ட அறிக்கை திருத்தப்பட்டு வருகிறது. |
| 3 | கனரக வாகன கட்டமைப்பு குழுமம், நாமக்கல் | 1473.61 | 1107.29 | 98.53 | 232.79 | 35.00 | திட்ட அறிக்கை திருத்தப்பட்டு வருகிறது. |
| 4 | மைக்கால் ஃபார்மா, குழுமம், சென்னை | 342.63 | 266.11 | 34.26 | 42.26 | 0.00 | திட்ட அறிக்கை திருத்தப்பட்டு வருகிறது. |
| 5 | மின் பொருள் குழுமம், கோயம்புத்தூர் | 1482.00 | 1037.40 | 100.00 | 197.16 | 147.44 | திட்ட அறிக்கை திருத்தப்பட்டு வருகிறது. |



## இணைப்பு – ஒ
## குறு,சிறு நிறுவனங்கள் – குழும வளர்ச்சித் திட்டம்
## ( பொது வசதி மையம்)
## ASIDE திட்டத்தின் கீழ் பரிசீலனையிலுள்ள குழும திட்டம்

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எண் | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | மைய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | சிறப்பு நோக்க ஊர்தி பங்கு | வங்கிக் கடன் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | தேயிலைக் குழுமம், மேட்டுப் பாளையம் | 1500.00 | 1200 | 100.00 | 200.00 | 0.00 | மாநில அளவிலான குழுத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. அசைடு திட்டத்தின் கீழ் ரூ.12.00 கோடி நிதி உதவி கோரி மைய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. |

## குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

## வரவு—செலவு திட்ட மதிப்பீடு

## கோரிக்கை எண்.44

(ரூபாய் ஆயிரத்தில்)

| கணக்குத் தலைப்பு | 2013—14ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு | 2013—14ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு | 2014—15ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| 2851. கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் | 2621861 | 1830687 | 2841067 |
| 2852. தொழில்கள் | 75014 | 116077 | 76563 |
| **3451.** தலைமைச் செயலகம் – பொருளாதாரப் பணிகள் | 27346 | 25486 | 27595 |
| **4059.** பொதுப் பணிகள் குறித்த மூலதனச் செலவு | - | 250000 | 150000 |
| **4425.** கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு | 1 | 1 | 2700 |
| **4851.** கிராமத் தொழில்கள் சிறு தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 665401 | 672792 | 501002 |
| **7610.** அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள் | 1 | 1100 | 1 |
| **2425** கூட்டுறவு | 1 | 1 | 1 |
| **மொத்தம்** | 3389625 | 2896144 | 3598929 |